ISSN 2792-1026

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

ஐந்தாவது அகவையை நோக்கிய பயணத்தில்...

www.magazine.skytamilnews.com skytamil.lk@gmail.com Thuninthelu Magazine

மாதந்தோறும் | இதழ் - 44 | 25 ஒக்டோபர் 2025

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවට්) ලිමිටඩ්
REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA



துணிந்தெழு சஞ்சிகை நடாத்தும் கவிதைப் போட்டி – 2025



இலக்கிய வானில் சிறகடிக்கும் சுமைய்யா ஜெஸ்மி மூஸா



கல்வியும் இளைஞர்களின் கனவுகளும்



ஊடகத் துறையில் குலசிங்கம் கிலசனுக்கு இளங்கலைஞர் விருது



திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள இயற்கையின் பொக்கிஷங்களில் ஒன்றான கன்னியா வெந்நீர் ஊற்று



## பேச்சாற்றலை ஆயுதமாக பயன்படுத்தும் ஸமீரா ஸகி அவர்களுடனான நேர்காணல்

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙඩ්
REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA



ஜே.எம்.பாஸித்
ஸ்தாபக பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை



பொது முகாமையாளர்
ஹுபைப் முஸம்மில்



பிரதி முகாமையாளர்
அஸ்ரி இப்னு அமீர்



பிரதம ஆசிரியர்
ஹப்ஸா பஹுமீர்

## ஆலோசகர்கள் :

புரவலர் ஹாசிம் உமர்
தெ. செந்தில்வேலவர் – பிரதம ஆசிரியர் தினகரன்
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) – கத்தார்
மொஹமட் சாலிஹீன் – சிரேஸ்ட வானிலை அதிகாரி
றியாத் ஏ மஜீத் – சிரேஸ்ட ஊடகவியலாளர்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

### நிர்வாக குழு:

ஜபீர் எம் மஹ்ரூப் – பிரதி முகாமையாளர், ஸ்கை தமிழ்
ஆஷிகா பர்சான் – பிரதி முகாமையாளர், ஸ்கை லங்கா

### பிரதம ஆசிரியர்:

ஹப்ஸா பஹுமீர் – துணிந்தெழு சஞ்சிகை

### இணையாசிரியர்கள்:

எம்.எஸ்.எம்.ஸாகிர் – சாய்ந்தமருது
குலசிங்கம் கிலசன் – கல்முனை
முனீரா வாஹித் – பதுளை
ஜவ்சன் அஹமட் – மருதமுனை

### ஆசிரியர் குழு உறுப்பினர்கள் :

மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி
ஏ.எம். கஸ்பியா வீவி – கல்முனை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
றிஹானா இஷாக் – கம்பளை
மொஹமட் நிப்ராஸ் – வாழைச்சேனை
எம்.பஹ்த் ஜுனைட் – காத்தான்குடி
றுக்ஷானா யஹியா – பாணந்துறை
ஹஸீனா முன்ஸிர் – கத்தார்
பாத்திமா பாதுஷா – கண்டி
ஷிமாம் முஸ்தாக் – அக்கரைப்பற்று
பாத்திமா அஸ்ரிபா – காவத்தமுனை
சி.கற்பஹாசினி – இரத்தினபுரி
பிரிந்தா புஷ்பாகரன் – களுவாஞ்சிக்குடி

### வடிவமைப்பாளர்கள்:

ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் – அம்பாறை
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

### இணையத்தளம் மற்றும் சமூக வலைதளம் பொறுப்பாளர்:

அஸ்ரி இப்னு அமீர் – அட்டாளைச்சேனை
ஜவ்சன் அஹமட் – மருதமுனை
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

+97431060249 | 0757000791 skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com

## ஆசிரியர் கருத்து......

# பாதையில் பேசும் காலடி ஓசை

வாழ்க்கை என்பது ஒரு நெடிய பயணம். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் வெறுமனே மண்ணைத் தொடும் ஒலி அல்ல அவை நம் முயற்சிகளின், சிந்தனைகளின், போராட்டங்களின் பேசுங் குரல்கள். இந்த “காலடி ஓசைகள்” வெளியிலிருந்து கேட்பவருக்கு அது வெறும் சத்தம் மட்டுமே. ஆனால், அந்த அடியை எடுத்து வைத்த நமக்கோ, அது ஒரு கதை, ஒரு அரிய அனுபவம், நம்முடைய தனித்துவமான அடையாளம்.

“நமது பயணப் பாதை எப்போதும் நிசப்தமானதன்று அது சலசலப்புகளால் நிறைந்திருக்கும். சிலர் நம்மைத் தாண்டி விரைந்து செல்ல முற்படலாம் வேறு சிலர் பின்னால் இழுத்து, நமது வேகத்தைக் குறைக்கப் பிரயத்தனப்படலாம். சில கணங்களில், புற உலகு அறியா வண்ணம், நாமே நம்மைச் சந்தேகிக்கும் இருண்ட தருணங்களும் உண்டு. எனினும், நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் நம்முடைய தனிப்பட்ட உறுதிப்பாட்டின் பிரகடனம். அதனால்தான், அந்தக் காலடி ஓசைகள் வெறும் ஒலிகளாக மட்டும் இருப்பதில்லை. அவை நம்முடன் உரையாடுகின்றன, நம்மை உற்சாகப்படுத்துகின்றன, நம் தன்னம்பிக்கைக்கு உயிரூட்டுகின்றன.”

“வாழ்க்கைப் பாதை என்பது ஒரு தனித்த வழித்தடம். ஒவ்வொரு மானுடரும் அவருக்கென வரையறுக்கப்பட்ட தனிப் பாதையிலேயே காலடி பதிக்கிறார். ஒருவரின் நடையும் மற்றொருவரின் நடையும் ஒத்திருப்பதில்லை ஒருவரின் அசைவு மெதுவாகலாம், மற்றொருவரின் நடை விரைந்து செல்லலாம். ஆயினும், ஒவ்வொரு காலடியின் அசைவும் ஒரு இலக்கை நோக்கிய பயணமே.”

நம் காலடி ஓசைகள் நம் உள்மனத்தின் எதிரொலி. அவை, “செல்லும் வழி சரிதான்” எனச் செவிமடுத்து வழிகாட்டும், சில சமயம், “இங்கு நின்று, நிதானித்துச் செல்” என்றும் எச்சரிக்கும். சில ஓசைகள் தோல்வியின் கசப்பான நினைவுகளால் நம்மை அச்சமூட்டிப் பார்க்கும். வேறு சிலவோ, வெற்றியின் தாகத்தால், நம் மனதில் அசைக்க முடியாத நம்பிக்கையை விதைக்கும். இவ்வாறு, நம் காலடிச் சலசலப்புகள் பயணத்தின் உணர்வுபூர்வமான நிலைகளை வெளிப்படுத்தும்.

நாம் அடிக்கடி எதிர்ப்புகளையும், தடைகளையும் சந்திக்கிறோம். தோல்வி, விரக்தி, அவமானத்தின் கூரிய முட்கள் நம் பயணப் பாதையில் சிதறிக் கிடக்கலாம். ஆனால், அந்த முட்களைக் கடந்து, நாம் வைக்கும் அடுத்த அடியே நம்முடைய நிஜமான வெற்றி. அந்தத் துணிச்சலான அடியின் ஓசைதான் அனைத்தையும் விட மேலானது. சவால்களுக்குப் பின் கேட்கும் அந்த ஒலியை நாம் ஒருபோதும் மறக்கவியலாது. அதுதான் நம்மைத் தூக்கி நிறுத்தி, “நீ இந்தப் பேரண்டத்தின் நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டவன்” என்று நம் ஆன்மாவிற்குள் உத்வேகமாய் முழங்குகிறது.

நம் பயணம் தொடர்கையில், நாம் சோர்வுற்ற நிலைகள், உடன் நடந்த நண்பர்கள், கடந்துபோன கனவுகள் என அனைத்தும் நம் காலடித் தடங்களோடு கலந்து, ஒரு புதிய சங்கீதமாய் ஓசையெழுப்புகின்றன. சில தருணங்களில், அந்த ஓசைகள் நமக்கு மட்டுமே கேட்கும் ஒரு ரகசியமாய்ப் பயணிக்கலாம். அவை நம் உள்ளத்தைத் தழுவிச் செல்லும் நம்முடன் உரையாடும் நம்மைப் படிப்படியாய்ச் செதுக்கி, புதுப்பிக்கும். அந்த ஆழ்ந்த, மெல்லிய, பேசும் ஓசைகளே வாழ்க்கையின் மகத்தான நுண்ணுணர்வுகள்.

ஓர் நாள் அந்த ஓசையை யாரேனும் கேட்டுத்தான் தீருவார்கள்... நாம் விட்டுச் சென்ற அழுத்தமான காலடித் தடங்களை ஓர் நாள் பிறர் கண்டறிவார்கள். நம் ஓசைகளைக் கேட்டு, “இவரும் இப்பாதையில் நடந்து, ஒரு சரித்திரத்தை உருவாக்கியுள்ளார்” என்று உணர்வார்கள். அதுதான் மானுடப் பயணத்தின் உண்மையான சிறப்பு. நாம் வெறும் வழிப்போக்கர்கள் அல்ல நம் பாதையை மற்றவர்கள் பின்தொடரும் அளவுக்கு ஆழமான அர்த்தமுள்ள தடங்களை விட்டுச் செல்லும் முன்னோடிகள்.

அதனால்தான், நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடி ஓசையும் ஆழமான அர்த்தம் பொதிந்ததாக ஒலிக்கட்டும். உங்கள் பாதை,மற்றவர்களுக்கு நம்பிக்கையூட்டி, ஒரு தெளிந்த வழிகாட்டியாக அமையட்டும்.



அஸ்ரி இப்னு அமீர்
பிரதி முகாமையாளர்
துணிந்தெழு சஞ்சிகை

www.magazine.skytamilnews.com

# கல்வியும் இளைஞர்களின் கனவுகளும்



**கல்வி என்பது ஒரு விளக்கு: கனவு என்பது அதில் ஏற்றப்பட்ட தீபம்.**

மனித வாழ்க்கையின் அடிப்படை தூண் கல்வி. பிறந்தவுடன் நம்மை வழிநடத்தும் முதல் ஒளியாக கல்வி மாறுகிறது. ஒரு குழந்தை எழுத கற்றுக் கொள்வது மட்டுமே கல்வி அல்ல. நல்லது, கெட்டது என்ற வித்தியாசத்தை உணர்தல், அன்பும் ஒற்றுமையும் கற்றல், மற்றவர்களை மதிப்பது போன்ற வாழ்க்கை மதிப்புகளை உட்கொள்வதும் கல்வியின் பாகமே.

கல்வி என்பது பள்ளிக்கூடத்தின் சுவறுக்குள் முடங்கிய ஒன்று அல்ல. அது வாழ்க்கையின் ஒவ்வொரு மூலையிலும் துளிர் விடுகிறது. ஒரு விவசாயியின் கையில் விதை விதைக்கும் நேரத்தில் கூட கல்வி உள்ளது. ஒரு தாயின் முகத்தில் மழலைக்குப் பாசம் காட்டும் நேரத்திலும் கல்வி உள்ளது.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். அவர்களின் கனவுகள் தான் எதிர்காலத்தின் வரைபடம். ஒவ்வொருவரும் தனித்தனி கனவுகள் கொண்டிருக்கிறார்கள். அவற்றில் மருத்துவர், ஆசிரியர், பொறியியலாளர், தொழில்முனைவோர், விளையாட்டு வீரர் அல்லது சமூக சேவகர் என்பனவாகும், ஆனால் எல்லா கனவுகளுக்கும் அடித்தளமொன்று கல்வியாகும்.

இளைஞர்கள் தங்கள் கனவுகளை நோக்கி பயணிக்கும் போது, அவர்களுக்கு கல்வி வழிகாட்டியாக நிற்க வேண்டும். கல்வி அவர்களுக்கு அறிவையும் தைரியத்தையும் பொறுப்பையும் அளிக்க வேண்டும்.

வெற்றிக்காகப் போகும் பாதை எளிதல்ல. பல தடைகள், தோல்விகள் வரலாம். ஆனால் அவற்றை தோல்வியாக அல்ல பாடமாக பார்க்கும் மனப்பாங்கு தான் உண்மையான கல்வியின் பலன். ஒரு தோல்வி, ஒருவரின் வாழ்க்கையை முடித்து விடாது. மாறாக, அது இன்னும் வலிமையாக நிற்க வழி காட்டும்.

மகாத்மா காந்தி, ஏ.பி.ஜே. அப்துல் கலாம், நெல்சன் மண்டேலா போன்றோர் வாழ்க்கையில் பல தடைகளை சந்தித்தும்,

www.magazine.skytamilnews.com



கல்வியின் வெளிச்சத்தால் உலகத்தை மாற்றியவர்கள். அதே வெளிச்சம் நம் இளைஞர்களையும் வழிநடத்த வேண்டும்.

இன்றைய கல்வி மதிப்பெண்களுக்காக மட்டும் மாறிவிட்டது. ஆனால் உண்மையில், கல்வி மனதை வளர்க்கும் ஒரு பயணம் ஆக வேண்டும்.

புத்தக அறிவுடன், மனிதாபிமானம், பொறுமை, ஒற்றுமை, மரியாதை போன்ற மனித மதிப்புகள் சேர்ந்து வந்தால் தான் கல்வி முழுமை பெறும்.

ஒரு நல்ல கல்வி பெற்ற இளைஞன் தன் கனவுகளை நனவாக்கும் போது, சமூகத்தையும், நாட்டையும் உயர்த்துவான்.

ஒரு நாட்டின் வளர்ச்சி, அதன் இளைஞர்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள் என்பதில் தான் உள்ளது. கனவு காண்பது குற்றமல்ல. கனவு காணாமல் வாழ்வதே குற்றம்.

ஒரு இளைஞன் தனது திறமையை நம்பி, கடின உழைப்புடன் முன்னேறினால், அந்த கனவுகள் நிச்சயமாக நனவாகும்.

இன்றைய இளைஞர்கள் கல்வி மூலமாக உலகத்தை மாற்றும் சக்தியுடன் நிற்கிறார்கள். அதனால் கல்வி மற்றும் கனவு இணைந்தால் அது ஒரு புரட்சியாக மாறும். கல்வி என்பது வாழ்க்கையை மாற்றும் வித்தாகும். இளைஞர்கள் அந்த வித்தை நம்பிக்கையுடன் விதைத்தால், நாளைய இலங்கை அறிவால் மலர்ந்த தோட்டமாக மாறும்.

கல்வி நம்மை உயர்த்தும், கனவுகள் நம்மை உயிரோடே வைத்திருக்கும்.

இவ்விரண்டையும் இணைத்து வாழ்ந்தால், எந்த இளைஞனும் தன் எதிர்காலத்தை வெற்றிமாலையாக்கலாம்.

“நம்பிக்கையுடன் கனவு காணுங்கள், கல்வியுடன் அந்தக் கனவுகளை நனவாக்குங்கள், அதுவே வாழ்வின் வெற்றி.”

**ஆக்கம்:**
**ஏ.அல்மாஸ்**
**பேருவளை**

www.magazine.skytamilnews.com

# அன்பு எனும் நூல்



மூன்றெழுத்து மந்திரம் இவ்வுலகினை ஆட்சி செய்கிறது. எதிர்பார்ப்புகள் இல்லாது கனிவோடு கிடைப்பது அன்பு மட்டும் தானே....

தாயோடு சேயும் பிணைத்திடும் அன்பு. தொப்புள் கொடியோடு உறவானதோ என்று...!!!

பல நேரம் புலம்பியவனுக்கும் புலப்படா மந்திரம் தானோ என்று...!!

அன்று ஓர் இரவு நேரம் சென்னையில் இருந்து திருநெல்வேலி நோக்கி ரயில் பயணம் மேற்கொள்ள வேண்டி சென்னை ரயில் நிலையம் நோக்கி வேகமாக வந்தடைந்தேன். எங்கும் பரபரப்புடனே மக்கள் அங்கும் இங்கும் ஈசல் கூட்டத்தினை போல நகர்ந்து கொண்டிருந்தார்கள். வாகன நெருடல்களுக்கு இடையில் மெல்ல மிதந்து வந்ததனால் இரவு உணவு வாங்க முடியாமல் ரயில் நிலையம் வந்தடைந்தேன். காலையில் சாப்பிட்டது மதிய உணவும் சாப்பிடவில்லை வேறு...

ரயில் நிலையத்திற்குள் நுழைந்து விரைவு வண்டி நிற்கும் இடத்திற்கு வேகமாக சென்றடைந்தேன்.

நெல்லை விரைவு வண்டி வேகமாக வந்து தனது கோபத்தை மெல்ல குறைத்து கொண்டது போல நிறுத்துமிடத்தில் அமைதியாக நின்று கொண்டிருந்தது.

டிங் ....டிங்.... டிங்..... யாத்ரிகன் ருபியா கிராப்பிஜியன் காடி நம்பர் 12631...

www.magazine.skytamilnews.com

கேட்கும் போதே ஹிந்தி தெரியாது சாமி என்பது போல அறக்கப்பறக்க முழித்து கொண்டே இருக்கும் பொழுது தேன் தமிழ் ஊற்றெடுக்க பயணிகளின் கனிவான கவனத்திற்கு நெல்லை அதிவிரைவு வண்டி நடைமேடை 7இல் இருந்து 08:10 மணிக்கு புறப்படும் என சொல்லப்பட்டது.

அப்போது மெல்ல எனை ஆசுவாசப்படுத்திக் கொண்டு ரயிலில் ஏறி எனக்கான இருக்கையில் அமர்ந்து கொண்டேன். இடது புறம் உள்ள இருக்கையின் கீழே சாளரத்தின் பக்கம் உறுதி செய்யப்பட்ட இருக்கை என்னுடையது. எனக்கு எதிர்புறம் அழகான குடும்பமும் பயணித்தார்கள். அம்மா, இரண்டு அக்கா, சின்ன பையன், குட்டிப்பாப்பா என ஐந்து நபர்கள்.

சற்று நேரத்தில் ரயில் வண்டியானது தண்டவாளத்தின் மீது கொண்ட காதல் சற்று கசந்து போனது போல மெல்ல மெல்ல அசைந்து விடை பெற்று நகரத் தொடங்கியது.

சிறிது நேரத்தில் டிக்கெட் பரிசோதகரும் வந்தார். அவர் அவர்களுக்கான இடங்களை பரிசோதித்து பெயரினையும், அடையாள அட்டையினையும் பரிசோதித்துக் கொண்டிருந்தார். எதிர்புறம் இருந்த அம்மா வயது 60 இருக்கும். இஸ்லாமிய பெண்மணி அவர்கள். பரிசோதகரிடம் சென்று, “ஐயா, எனது இருக்கை மேலே உள்ளது அதில் என்னால் ஏறி செல்ல முடியாது. கீழே ஏதேனும் இருக்கை மாற்றித்தர இயலுமா?” எனக் கேட்டார்.

பரிசோதகரும் அதற்கு “காலியான இடங்கள் ஏதும் இல்லைங்க... வேண்டும் என்றால் யாராவது தங்களது இருக்கையினை மாற்றிக் கொள்கிறார்களா என்று வேண்டுமானால் கேட்டு பாருங்கள்” என சொல்லி கிளம்பிவிட்டார்.

அவர்களும் யாரிடம் கேட்பது என்று தெரியாமல் அமைதியாய் அமர்ந்து கொண்டார்கள். இதை எல்லாம் கவனித்தவனாக நானே முன் சென்று “அம்மா பரவாயில்லை எனது இருக்கையினை எடுத்து கொள்ளுங்கள் நான் மேலே சென்று படுத்து கொள்கிறேன்” என சொல்லி மாற்றிக் கொண்டு, மேல் இருக்கையில் ஏறிப்படுத்துக்கொண்டு ஏதேனும் ஒரு வரிசையில் நின்றவனின் கதைகள் புத்தகத்தின் பக்கங்களை புரட்டிக் கொண்டு இருந்தேன்.

அரைமணி நேர இடைவெளியில் அந்த குடும்பத்தின் பெரிய அக்கா என நினைக்கிறேன் எனது அருகே வந்து “தம்பி... சாப்பாடு சாப்டுறீங்களா என கேட்டார்கள்....”

“இல்லைக்கா பரவாயில்லை இருக்கட்டும்” என்று கூறினேன்.

அக்கா “இல்லை தம்பி.. உங்கள பார்த்தா சாப்பிடாதது போல இருக்கு... கொஞ்சம் சாப்பிடுங்க... சாப்பாடு நிறையவே இருக்கு” எனச்சொன்னார்கள்.

பரவாயில்லை என எத்தனை முறை சொன்னாலும் அம்மாவும், அக்காவும் விடாத புடியாக சாப்பாட்டினை தந்தார்கள். அதற்கு மேல் என்னால் தடுக்க முடியவில்லை.

பணி நிமித்தமாக அவசர அவசரமாக கிளம்பினேன். வாகனங்கள் சென்னையின் நெருக்கடியான சாலைகளில் ஊர்ந்து வந்து சேர்வதற்குள் நேரம் கடந்தோடி போயின. சாப்பாடு எதுவும் வாங்கவும் இல்லை... கடுமையான பசியும் கூட, ரயில் வரும் உணவு பொட்டலங்களை அதிகமாக விரும்பி வாங்கி சாப்பிடும் பழக்கம் இல்லை.

பசியோடு இருந்தவனுக்கு எதிர்பாராமல் அன்போடும், கனிவோடும் வந்து சேர்ந்தது

www.magazine.skytamilnews.com



அந்த சாப்பாடு... என் அம்மாவோ, அக்காவோ உரிமையோடு கொடுத்தது போல அந்த உணர்வு...

சாப்பாடு சும்மா சொல்ல கூடாது. அருமையான சுவை... கொத்து புரோட்டோ, இட்லி, தோசை, கோழி குருமா என தடால் அடியாக இருந்தது. சாப்பாட்டினை பார்த்து மலைத்துப் போனேன். எம்மாடியோ....!!

“இவ்வளவா.... அக்கா... சாப்பிட முடியாது... என் வயிறு அவ்வளவு தான்” என சிரிப்புடனும், நையாண்டி பேச்சுடனும் ரயில் பயணம் தொடர்ந்தது. சாப்பிட்டு முடித்தவுடன் அனைவரும் மெல்ல உறங்கிப் போனார்கள்.

ஏனோ, எனக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. யாரிடமும் அதிகம் எதுவும் கேட்டிடும் பழக்கம் இல்லாதவன். அன்றையபொழுது கேட்காமல் கிடைத்த அந்த பெரும் உதவி, வயிற்றையும், மனதையும் அதீதமாய் நிறைத்தது.

நடுநிசி இரவினை கிழித்து ரயில் வண்டி சென்று கொண்டிருந்தது. நானும் சற்று அயர்ந்து உறங்கிப்போனேன்.

காலை நெல்லையினை ரயில் வந்து அடைந்தது. அனைவரும் இறங்கினோம். அந்த அம்மாவும், அக்காவும் என்னிடம் வந்து நன்றியினை சொன்னார்கள். நானும் மாறாக அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்தேன்.

“நீங்கள் செய்தது பெரிய உதவி” என சொன்னேன்.

“அதுலாம் ஒன்னும் இல்லை” என சொன்னார்கள்.

“உனது பெயர் என்ன தம்பி” என கேட்டார்கள். “ரஹ்மான் அம்மா” என்று உரிமையோடு சொன்னேன்.

அழகான அந்த புன்முறுவலோடு ஸலாத்தினை சொன்னார்கள். அதாவது இறைவனின் சாந்தியும், சமாதனமும் உண்டாவதாக....!!!

இக்கட்டான சூழ்நிலைகளில் நம்மை தேடி வந்து கிடைக்கும் உதவி ஆகச் சிறந்தது. அது உணவாக இருந்த போதும் உன்னதமானதும் கூட.

அன்பு மட்டுமே நம் வாழ்வியலை மென்மேலும் அழகாக்கக் கூடும். இந்த நாள் என் வாழ்வின் அடுத்த கட்ட நகர்தலுக்கு இவர்களை போன்ற நல்லுள்ளங்களின் எதிர்பாராத அந்த உதவியும் கூட எனக்கு ஆகப் பெரும் பங்கினை வகிக்கின்றன.

ரஹ்மான்
மேலப்பாளையம்,
திருநெல்வேலி

www.magazine.skytamilnews.com



# மூழ்கி முத்தெடுக்கும் ஆசான்களுக்கு!

அன்னையின் அரவணைப்பில்
ஆண்டுகள் சில கழித்து அழுதபடி
வகுப்பறையில் நுழைபவர்களை
ஆயிரம் சாதனைகளால் அரங்கேற்றி
விட ஆசிரியர்களாய்
அவதாரம் எடுத்திருக்கும் மாதாக்களே!

ஆசிரியப் பணியில் அயராது உழைத்து
மாற்றார் புகழும் மனிதப் பண்புகளை
விதைத்து என்றென்றும் இறுமாப்புக்
கொள்ளாமல் ஏற்றிவிடும் ஏணியாய் நீங்கள்!

கடமையிலே கண்ணும் கருத்தாக
கல்வியைப் புகட்டுவதில் என்றும்
கண்டிப்பாக நாடும் வீடும் போற்றும்
மாண்புமிகு மாணவர்களாக்க
தன்னையே அரப்பணிக்கும்
கலங்கரை விளக்குகளே!

பட்டை தீட்டத் தீட்டத்தான் வைரம் -
அதுபோல வெற்றுக் காகிதமாய்
இருந்த எங்கள் சிறார்களை
கண்ணைக் கவரும் ஓவியங்களாய்
வண்ணம் தீட்டிய ஓவியர்கள் நீங்கள்!

அடிப்படைகளோடு அனைத்தையும்
கற்றுத் தந்து அஸ்திவாரமாய்
அவர்களுக்கோர் வழிகாட்டியாய்
தன்னை விட தரணியிலே சிறந்து
விளங்கிட சிற்பமாய் செதுக்கும் சிற்பிகளே!

சோதனைகள் பல தாண்டி
சாதனைகள் படைத்து
கண்ணியமாய் வாழ
கல்வியோடு அறிவுரையும் நீர் தந்தீர்!

நாளைய நாயகர்களாய் நாட்டில் வலம்வர
அவதாரம் பல எடுத்த புகழாரங்கள்
பாட நாளொன்று போதாது
நாளெல்லாம் தொடரட்டும்
உங்கள் நல் சேவை

ஆக்கம்:
சியாத் அஸ்வா
சேனையூர்

www.magazine.skytamilnews.com

# ஆளுமை அறிமுகம்

சமூகத்தின் மத்தியில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பேச்சாற்றலை ஆயுதமாக பயன்படுத்தும்

# ஸமீரா ஸகி

## அவர்களுடனான நேர்காணல்



**இன்றைய சமூகத்தில் நம்மை நாமே நம்புவது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மனிதரும் தனித்துவம் கொண்டவர்கள். உங்கள் திறமையை மற்றவர்களுடன் ஒப்பிடாமல், உங்கள் சொந்த பயணத்தில் நம்பிக்கையுடன் முன்னேறுங்கள்.**

www.magazine.skytamilnews.com

ஸமீரா ஸகி அவர்கள் மத்திய மாகாணத்தின் அழகிய பிரதேசமான கல்ஹின்னையினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தையின் வியாபாரம் காரணமாக மாத்தளை நகரிற்கு இடம்பெயர்ந்து, தற்போது மாத்தளை நகரில் வசித்து வருகிறார். இவர் ஸகி தாஜுதீன் மற்றும் மிஸ்ரியா தாஜுதீன் ஆகியோருக்குப் பிறந்த மூத்த புதல்வியாவார். இவருக்கு மூன்று சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி உள்ளனர். இவரது துணையின் பெயர் ரினாஸ் முகம்மட்.

இவர் சிறந்த பேச்சாளராகவும் ஊடகத் துறையில் சிறப்பான முறையில் பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சமூகத்தின் மத்தியில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பேச்சாற்றலை ஆயுதமாக பயன்படுத்தும் ஸமீரா ஸகி அவர்களுடனான நேர்காணல் இதோ..

**1.நீங்கள் கல்வி கற்ற பாடசாலைகள் மற்றும் கற்கைகள் பற்றி கூறுங்கள்?**

நான் மாத்தளையில் அமைந்துள்ள ஆமீனா பெண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்றேன். 2013ஆம் ஆண்டு, மாத்தளையில் உள்ள ஆமீனா பெண்கள் தேசிய பாடசாலையில் எனது சாதாரண தரப் பரீட்சையை முடித்தேன். அதன் பிறகு, பஸ்யாலையில் அமைந்துள்ள இப்னு உஸைமீன் அரபுப்பெண்கள் கல்லூரியில் கல்வி கற்றேன். உயர் தரப் பரீட்சையை 2017 ஆம் ஆண்டு தனியார் முறையில் முடித்தேன். அதன் பின்னர், 2022 ஆம் ஆண்டில் IDMNC கல்லூரியில் சட்டத்தில் பட்டப்படிப்பு (Bachelor of Law) முடித்துள்ளேன்.






மேலும், முன்பள்ளி ஆசிரியைப் பயிற்சி டிப்ளோமா (Diploma in Pre- School Teacher Training), கிரா∴பிக் வடிவமைப்பில் டிப்ளோமா (Diploma in Graphic Design), அடைமொழி மேம்பாடு டிப்ளோமா (Diploma in Personality Development), மனிதவள முகாமைத்துவம் மற்றும் அலுவலக நிர்வாகத்தில் டிப்ளோமா (Diploma in HRM) ஆகிய துறைகளில் டிப்ளோமா கற்கைகளைப் பூர்த்தி செய்துள்ளேன்.

**2. நீங்கள் தொழில் ரீதியாக செய்யும் பணிகள் பற்றிக் கூறலாமே?**

மாத்தளையிலுள்ள அஹதியா பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். மேலும், கட்டணம் அடிப்படையில் வடிவமைப்பு சேவைகளையும் (Graphic Designing Services) செய்து வருகிறேன்.

**3. ஊடகத் துறையில் நீங்கள் மேற்கொள்ளும் பணிகள் பற்றி கூறுங்களேன்?**

நான் Short News Media எனும் செய்தி நிறுவனத்தில் செய்தித் தொகுப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றுகிறேன்.

**4. நீங்கள் "Motive Life" என்ற பெயரில் யூடியூப் சேனலினை நடாத்தி வருகிறீர்கள். அதனூடாக நீங்கள் செய்யும் பணிகள் பற்றிக் கூறலாமே?**

சமூகத்துக்கு தேவையானதும் அவர்களை ஊக்கமளிக்கும் (Motivation) வீடியோக்கள் மற்றும் அரசியல் தொடர்பான உள்ளடக்கங்களை அதனூடாக பகிர்ந்து வருகிறேன். மேலும் இன்ஸ்டாகிராம் மற்றும் டிக்டொக் இல் Zameera_official123 என்ற பெயரில் சமூக வலைத்தளங்களில் இருப்பதோடு அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வு சார்ந்த பதிவுகளையும் பகிர்கிறேன்.

**5. "Motive Life" யூடியூப் சேனலைத் தொடங்க உங்களுக்குத் தூண்டுதலாக இருந்த விடயம் என்ன? யூடியூப் வாசகர்களிடமிருந்து உங்களுக்குக் கிடைக்கும் ஆதரவு, விமர்சனங்கள் எவ்வாறு காணப்படுகிறது பற்றிக் கூறுங்களேன்?**

Motivational Course, Personality Development Course, Speaker Course, Leadership Course போன்ற பாடநெறிகளில் பயிற்சிகளை நான் பெற்றுள்ளேன். பயிற்சிக்குப் பின்னர் வாய்ப்புகள் வழங்கப்படும் என கூறப்பட்டது. ஆனால், எனக்கான வாய்ப்பு எதுவும் அளிக்கப்படவில்லை. அப்போது எனக்குள் ஒரு தீர்மானம் ஏற்பட்டது. "வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றால், நான் தான் ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டும்." அந்த தீர்மானத்தின் பயனாகத்தான் என் 'Motive Life' யூடியூப் சேனல் தொடங்கப்பட்டது.

"நான் எதிர்பார்த்த வாய்ப்புகள் வரவில்லை என நினைத்து நின்றுவிடாமல், நான் ஒரு வாய்ப்பாக மாற வேண்டும், மற்றவர்களுக்கும் பயனளிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த பயணத்தை தொடங்கினேன்." தொடக்கத்தில், மக்கள் என் உள்ளடக்கங்களை பார்ப்பார்கள், என் சேனலுக்கு அதிக வரவேற்புக்கிடைக்கும் என எந்த எதிர்பார்ப்பும் எனக்கில்லை. ஆனால், ஒரு விஷயத்தில் மட்டும் உறுதியாக

www.magazine.skytamilnews.com

இருந்தேன். "தொடர்ந்து முயற்சி செய்தால், தரமான தகவல்களை வழங்கினால் மற்றும் என் செயலில் ஒரு நோக்கம் இருந்தால், முடிவுகள் வெற்றிக்கானப் பாதையை உருவாக்கும்" பார்வையாளர் எண்ணிக்கையை நோக்கி என் பயணத்தை மதிப்பீடு செய்யவில்லை.

அதன் பதிலாக, நான் செய்கிற காரியத்தின் மீது நம்பிக்கையுடன் இருந்தேன். மெதுவாக, என் சேனல் வளரத் தொடங்கியது. இன்று ஒருவராவது "இந்த வீடியோ எனக்கு உதவிகரமாக இருந்தது" என கூறும் போது, அதுவே எனக்கு மிகப்பெரிய வெற்றி.

எனது நோக்கம் எப்போதும் எண்ணிக்கைகளை மிஞ்சி, நபருக்கொரு மாற்றத்தை உருவாக்குவது தான். 'Motive Life' என்பது வெறும் யூடியூப் சேனல் அல்ல இது நம்பிக்கை, ஊக்கம், மற்றும் நோக்கத்திற்கான ஒரு வழிகாட்டும் சேனல் ஆகும்.

இன்றுவரை பலர் இந்த பயணத்திற்கு ஆதரவு ஆளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவே எனக்கு ஒரு இரட்டிப்பு Motivation ஆக இருக்குகிறது.

அல்ஹம்துலில்லாஹ், இறைவனின் உதவியால் நாளுக்கு நாள் எனது வளர்ச்சியை கண்டு வருகிறேன். ஆரம்பத்தில் குறைந்த பார்வையாளர்களுடன் தொடங்கிய என் பயணம், இப்போது பலரின் ஆதரவைப் பெற்ற ஒரு அர்த்தமுள்ள பயணமாக மாறியுள்ளது. ஒவ்வொரு ஊக்கமளிக்கும் செய்தியும், ஆதரவான வார்த்தைகளும், எனது நோக்கத்தை மேலும் உறுதியாக்குகின்றன.

வெற்றிக்கான பயணம் ஒரே நாளில் தொடங்காது... ஆனால் ஒவ்வொரு நாளும் முன்னேறும் முயற்சியில் வெற்றி நிரம்பி இருக்கிறது.

எனக்கு எதிர்மறை கருத்துக்கள் மிக அதிகமாக வருவதில்லை. இருந்தாலும் சிலரால் சில நேரங்களில் எதிர்மறை விமர்சனங்கள் வரும். அவற்றை நான் கவனிக்காமல் மறுத்துவிடுகிறேன், ஏனெனில் எந்த விதமான முயற்சியிலும் எதிர்மறையான விமர்சனங்கள் வருவது இயற்கையானது. மக்கள் எப்போதும் நன்மையாகவும், தீமையாகவும் கருத்து தெரிவிக்க முன்வருவர். எனவே, நான்





நேரத்தை வீணாக செலவழிக்காமல், முன்னேற்றத்தை நோக்கி செயல்படுவதே முக்கியம் என நம்புகிறேன். இதனால் நான் எதிர்கொள்ளும் சவால்களை தாண்டி வளர்ச்சியை தொடர்கிறேன். உழைப்பில் உறுதி மற்றும் நம்பிக்கையுடன் முன்னேறுவதே என் நோக்கமாகும்.

### 6.உங்கள் துறைகளில் நீங்கள் எதிர் கொண்ட சவால்கள் அவற்றை எவ்வாறு தீர்த்துக் கொண்ட விதம் பற்றிக் கூறலாமே?

எதிர்கொண்ட சவால்களை பொறுத்தவரையில் ஆரம்பத்திலிருந்தே பல சவால்களை எதிர்நோக்கினேன். ஊடகத் துறையில் நுழையும் போதே, ஊடகத் துறை ஒரு சரியான துறையா? இது எனது தகைமைக்கு உகந்ததாக இருக்குமா? இது எனது ஆற்றலை மேலும் விருத்தி செய்யக் கூடிய துறையாக இருக்குமா? என நிறைய கேள்விகள் எனக்குள் ஓடிக்கொண்டே இருந்தன. ஏனென்றால் பலர் கூறுவார்கள், "ஊடகத் துறை பெண்களுக்கு பாதுகாப்பற்றது மற்றும் பெண்களுக்கு ஒரு உகந்த துறையாக மீடியா காணப்படாது" என இப்படி எல்லாம் பலர் கூறும் போது முடிவெடுக்க முடியாத நிலமையில் குழப்பத்தில் தள்ளப்பட்டேன். இதெல்லாம் ஒரு பெரிய சவாலாக எதிர்கொள்ள நேரிட்டேன். நான் என்ன செய்வது? வேலையை தொடர்வதா? அல்லது நிறுத்துவதா? இந்த மாதிரியான பல விடயங்கள் இருந்தாலும் இஸ்லாமியக் கோட்பாடுகளை பின்பற்றி, ஒரு பெண்ணாகவும், ஒரு ஊடகவியலாளராகவும், ஒரு சமூகத் தூதராகவும் தன்னம்பிக்கையோடும் எனது ஊடகத் துறை பயணத்தை ஆரம்பித்தேன்.

www.magazine.skytamilnews.com




நாம் ஒரு பொருளைப் பயன்படுத்தும் விதமே அதன் பயனையும் முடிவையும் தீர்மானிக்கும்.

ஊடகம் என்பதும் ஒரு சக்திவாய்ந்த கருவி. எந்த ஒரு கருவியும் நல்லதா, கெட்டதா என்பது அது எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதில்தான் உள்ளது. ஆரம்பத்தில் பத்திரிகை வாசிப்பதற்கும் கேமராவிற்கு முன்னாடி இருந்து பேசுவதற்கு மிகவும் கடினப்பட்டேன். ஏனென்றால் எனக்கு பழக்கமே இல்லாத விடயமொன்றில் ஈடுபடுவது ஒரு கடினமான விடயம் ஆகும். பேச்சுத்திறமை, ஒரு விடயத்தை எப்படி நாம் புரிந்துக்கொள்வது, எந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என இவை அனைத்தும் சவாலாக இருந்தாலும் புதிய அனுபவங்களை கொடுத்தது.

இருப்பினும் நான் என்ன நினைத்தேன் என்றால், எனது வெற்றிக்கான சவால்களை எனது வளர்ச்சிக்கான ஒரு படிக்கற்களாக எடுத்துக் கொண்டால், வெற்றிக்கான பாதையை வெகுவிரைவில் அடைய முடியும் என புரிந்துக் கொண்டேன்.

**7. உங்களது இலக்கு பற்றிக் கூறலாமே?**

ஊடகத் துறையிலும் சமூக மேடைகளிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் (impactful) குரலாக மாறுவதாகும். அதாவது, தரமான செய்திகளையும், உண்மை சம்பவங்களையும் மக்களிடம் கொண்டு செல்லும் ஊடகவியலாளராகவும், மன உறுதியையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும் ஊக்கமளிக்கும் (motivational) நிகழ்வுகள் மூலம் இளைஞர்களிடையே நல்ல மாற்றங்களை உருவாக்கும் ஒரு சமூக மாற்றத்துக்கான தூதராகவும் செயல்படுவதே என் இலக்காக இருக்கிறது.

மேலும், என் ‘Motive Life’ யூடியூப் சேனல் மூலம், மக்கள் வாழ்க்கையில் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்தும், அவர்களின் மன உறுதியையும்தன்னம்பிக்கையையும்உயர்த்தும் விதமாக பயனுள்ளதும் ஊக்கமளிக்கும் உள்ளடக்கங்களை வழங்க விரும்புகிறேன். இந்த சேனல் மூலம், இளைஞர்கள் மட்டுமன்றி, அனைத்து வயதினருக்கும் ஓர் உற்சாகம்,




ஒரு வழிகாட்டுதல், ஒரு நம்பிக்கை வழங்க வேண்டும் என்பதே எனது இலக்காகும்.

www.magazine.skytamilnews.com








www.magazine.skytamilnews.com

**8. உங்களோடு வாழும் சமூகத்துக்கு கூற எத்தனிக்கும் விடயங்கள் பற்றிக் கூறுங்களேன்?**

இன்றைய சமூகத்தில் நம்மை நாமே நம்புவது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மனிதரும் தனித்துவம் கொண்டவர்கள். உங்கள் திறமையை மற்றவர்களுடன் ஒப்பிடாமல், உங்கள் சொந்த பயணத்தில் நம்பிக்கையுடன் முன்னேறுங்கள்.

நமக்குள் இருக்கும் பலத்தை நாமே கண்டறிந்து, அதை சமூக நலனுக்காக பயன்படுத்த வேண்டும். யாரும் சிறந்தவர்கள் என்று பிறரால் நிர்ணயிக்கப்பட வேண்டியதில்லை. உங்கள் முயற்சியே உங்கள் அடையாளம்.

நான் எப்போதும் ஒரு விஷயத்தை நம்புகிறேன். "நல்ல மாற்றம் எங்கே ஆரம்பிக்கிறது என்றால், அது நம்மிடமிருந்துதான்." நாம் செய்வது சிறியது போல் தோன்றலாம், ஆனால் அது யாருக்காவது மிகப்பெரிய ஊக்கமாக அமையும்.

**9. எங்களது ஊடகமான ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பற்றி நீங்கள் அறிந்த விடயங்களை பகிர்ந்து கொள்ளலாமே?**

ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை போன்றவற்றின் பங்களிப்புகள் இன்றைய சமூகத்திற்கும், இளைஞர்களுக்கும் மிகவும் தேவையானவையாகவே காணப்படுகின்றன. திறமைமிக்க நபர்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதிலும், சமூக மாற்றத்திற்கு வழிகாட்டும் குரல்களாக இவை செயல்படுவதும் பாராட்டுக்குரியதாக இருக்கிறது.

துணிந்தெழு சஞ்சிகை வழியாக பலரும் தங்கள் கதைகளை பகிர்ந்து கொள்வதன் மூலம், மற்றவர்களுக்கு ஊக்கமும், நம்பிக்கையும் தருகிறது. இது போன்ற சஞ்சிகை சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் "நாமும் எதையாவது சாதிக்க முடியும்" என்ற உற்சாகத்தை ஏற்படுத்துகிறது.

உங்களது ஊடகத்தின் பணியும் எழுத்துக்களின் செதுக்கலான துணிந்தெழு சஞ்சிகையும் மென்மேலும் சிறப்பான முறையில் தொடர எனது வாழ்த்துக்கள்!



செவ்வி கண்டவர்:
**ஹப்ஸா பஹ்மீர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# நான் இப்படியும் தான்



ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்
புல்மோட்டை

எல்லோரும் போல்
நானில்லை


என் சந்தோஷங்கள் வேறு
என் இலக்குகள் வேறு
என் பாதைகள் வேறு

அவரவர் வாழ்க்கை
அவரவருக்கேற்றாற் போல்
மாறிக் கொள்வதாய்
என் வாழ்க்கையிலும்
பல மாற்றங்கள் நிகழாமலில்லை

பிடித்ததை பற்றிக்கொள்கிறேன்
பிடிக்காததை விட்டும் ஓரமாகிறேன்
என்னை அறியாமலேயே
கவர்ந்திழுக்கின்றவைகள் மீது
பரந்தளவில் மரியாதையை
முத்திரையிடுகின்றேன்

மீண்டும் சொல்லிக் கொள்கிறேன்
எல்லோரும் போல் நானில்லை
மனித மனங்கள் எதுவும்
ஒன்றைப் போல் இன்னொன்றில்லை
நானும் அப்படித்தான் போலும்
ஆராய்ந்ததில் ஆச்சரியப்பட்டேன்

# மனமுதிர்ச்சி



பஸ்லா பர்ஸான்
காத்தான்குடி

கூர்வாளாய் அறிவும்
சீர் கொண்ட அகமும்
நீர் வார்த்த குணமும்
பார் போற்றச் செய்யும்

பால் போன்ற தெளிவும்
தோல் ஆகிப் போர்த்தும்
கால் பதிக்கச் செய்யும்
தீயான சொல்லும் தீய செயலும்
காயங்கள் தராமல் மாயமாக மறையும்

பூவாகப் பாதை
புதுவாசம் வீசும்
எதுவான போதும்
பதமாகப் பேசும்

இதழோரப் புன்னகை
இகத்தையே புரியும்
அகமதன் முதிர்ச்சி
அர்த்தங்கள் அறியும்

நிறைகுட நிசப்தம்
நிறைவுக்கே உவமை
பறைந்திடும் உண்மை
மறை பகரும் மகிமை

இளம் கலைஞர் அறிமுகம்

# இலக்கிய வானில் சிறகடிக்கும் "சுமைய்யா ஜெஸ்மி மூஸா"



www.magazine.skytamilnews.com

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்திற்குட்பட்ட இயற்கை எழில் நிறைந்த மருதமுனை எனும் கிராமம், தனக்கென ஒரு இலக்கிய பாரம்பரியத்தைத் தாங்கி நிற்கிறது. அந்த மண்ணில் பிறந்தவர்தான் இன்று எழுத்துலகில் "சுமைய்யா ஜெஸ்மி மூஸா" என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் எழுத்தாளர் பாத்திமா சுமைய்யா.

அவரது தந்தை ஆமினா மர்சூக் எனும் புனைப்பெயருடைய முகம்மது மர்சூக் தொண்ணூறுகளில் தினசரிப் பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் கவிதை, கட்டுரை, நாடகம் என பன்முக இலக்கியச் செயற்பாடுகள் மூலம் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றவர். அந்தப் பாரம்பரியத்தின் பிள்ளையாகப் பிறந்த சுமைய்யா, இயற்கையாகவே தமிழ் மீதும் இலக்கியத்தின் மீதும் தீராத பேரார்வம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

பாடசாலைக் காலம் முதலே கட்டுரை, கவிதை, சிறுகதை, இலக்கியம் நயத்தல், அறிவிப்புத்துறை போன்ற துறைகளில் பங்கேற்று தனது திறமைகளை வெளிப்படுத்திய அவர், உயர் தரத்தில் 3A சித்திகளுடன் மாவட்டத்தில் ஏழாம் இடம் பெற்று, வழக்கறிஞர் துறைக்குத் தகுதி பெற்றிருந்த போதிலும், தமிழ்மீது கொண்ட அக்கறையால் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழைத் தெரிவு செய்து 2010 இல் கலைப் பட்டதாரியாக வெளியாகினார்.

2013 முதல் மருதமுனை கலாசார நிலையத்துடன் இணைந்து கவிதை, கட்டுரை, நாடகம், பாடல் ஆகியவற்றில் இளம் தலைமுறையை வழிநடத்தி வந்தார். திருமண வாழ்த்துக் கவிதைகள், இரங்கற் கவிதைகள் என சமூகத்தின் பல பரிமாணங்களிலும் அவரது பங்களிப்பு தொடர்ந்தது. 2015 இல் "House of English" முன்பள்ளியைத் தொடங்கி, கல்வி மட்டுமல்லாது குழந்தைகளுக்கு இசை, நாடகம், ஆடல், பேச்சு ஆகிய துறைகளிலும் பயிற்சியளித்து, ஆண்டுதோறும் பிரம்மாண்ட கலை நிகழ்வுகளை நடத்தி வருகிறார்.

2016 இல் அம்பாறை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக அரச சேவையில் இணைந்தவர், சிங்கள மொழியிலும் தனது திறமையை வெளிப்படுத்தி சகோதர இனத்தவரிடையே மதிப்பைப் பெற்றார். 2021 இல் கல்முனைப் பிரதேசத்திற்கு இடமாற்றம் பெற்று, பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவோடு இணைந்து கவியரங்கு, விவாத மேடை, அறிவிப்பாளர் பயிற்சி, பாடல் மற்றும் நாடகப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை முன்னெடுத்து வருகிறார்.



இவரது இலக்கியப் பயணத்தின் அடைவுமட்டங்களாக அரச மற்றும் பிற இலக்கியப் போட்டிகளில் பங்கேற்று, பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசியம், சர்வதேசம் என பல்வேறு நிலைகளில் சுமைய்யா பல விருதுகளை வென்றுள்ளார். 2021 இல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் படைப்பாக்கப் போட்டியில் சிறுகதைக்காக இரண்டாம் இடத்தையும் 2023 இல் மூன்று அரச இலக்கிய விருதுகளை பெற்றுக்கொண்டார். சிறுகதை, கட்டுரை, பாடலாக்கம் மூன்றிலும் முதலிடத்தை பெற்றார். 2024 இல் கானல் அமீரகம் (ஐ.அ. இராச்சியம்) சர்வதேச சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதையும் தேர்வானது. இந்தியாவின் பேசும் புதிய சக்தி சர்வதேச சிறுகதைப் போட்டியிலும் பங்கேற்றார். 2024 இலும் பிரதேச மற்றும் மாவட்ட இலக்கியப் போட்டிகளில் பாடல் ஆக்கம், ஆய்வுக் கட்டுரை, சிறுகதை என்பவற்றிலும் முதலிடம் பெற்றார்.

இவரது இலக்கியத்துறைக்கான பங்களிப்புக் -காக 2024ம் ஆண்டு "கலைஞர் சுவதம்" விருது கல்முனை பிரதேச செயலகத்தினால் வழங்கி வைக்கப்பட்டது. "சிறந்த பெண் ஆளுமை - 2024" விருது சிலோன் மீடியா போரத்தினால் வழங்கப்பட்டது.

2025 இல் தினகரன் வாரமஞ்சரி நடாத்திய சர்வதேச மருதூர்கொத்தன் இஸ்மாயீல் நினைவுச் சிறுகதைப் போட்டியில் 4ம் இடத்தை இவரது சிறுகதை பெற்றுக் கொண்டது. உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு இந்தியாவில் நடைபெற்றது. அதில் பேராளராகவும் பங்கேற்றிருந்தார். இந்த ஆண்டிலும் தேசிய இலக்கியப் போட்டிகளில் சிறுகதை, திரைப்பட விமர்சனம் என்பவற்றுக்கு பிரதேச மட்டத்தில் முதலிடம் கிடைத்தது.

தமிழைப் பிடித்ததால் இவர் படித்ததும் தமிழ். கரம் பிடித்ததும் தமிழ். இவரது கணவர் ஜெஸ்மி மூஸா பிரபல தமிழ் பாட ஆசிரியர், வலயத்திற்கான தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர். பன்னூலாசிரியர், தமிழ் முதுகலைத் தத்துவமானி, தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலாநிதி ஆய்வு மாணவன் என தமிழில் ஊறித் திளைத்தவர்




www.magazine.skytamilnews.com









என்று சொல்லிக் கொண்டே செல்லலாம். "சுமைய்யா ஜெஸ்மி மூஸா" என்ற பெயரில் எழுதி வரும் அவர், தனது சிறுகதைகளை ஒரு சிறுகதைத் தொகுப்பாக வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். தேசிய பத்திரிகைகளிலும், கிழக்கு மாகாண சாகித்ய விருது சஞ்சிகைகளிலும் அவரி, கீறல் போன்ற சிறுகதைகள் வெளிவந்துள்ளன, இந்திய சஞ்சிகைகளிலும் தொடர்ந்து எழுதி வருகிறார்.முகநூல் பக்கத்தினூடாகவும் அவரது கல்வி மற்றும் இலக்கியப் பயணத்தினை முன்னெடுத்து வரும் பாத்திமா சுமைய்யா அவர்களின் இலக்கியப் பயணம் தொடர்ந்தும் வெற்றிக் கொடி நாட்டி, தமிழுலகில் புதிய அத்தியாயங்களை எழுதிட "துணிந்தெழு சஞ்சிகை" சார்பாக வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கிறோம்.



**குலசிங்கம் கிலசன்**
**இணையாசிரியர்**
**துணிந்தெழு சஞ்சிகை**

# பேசும் பேனாக்கள்

## ஒக்டோபர் மாதமும் துணிந்தெழு சஞ்சிகையும்

வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும், பொது நூலகச் சேவைகளை மேம்படுத்துவதற்காகவும் 2004 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தேசிய வாசிப்பு மாதம் ஒவ்வொரு ஒக்டோபர் மாதத்திலும் பிரகடனப்படுத்தப்படுகிறது.

இம்மாதத்தில் கல்வி அமைச்சு பாடசாலைகளில் பல்வேறு வாசிப்பு மேம்பாட்டு திட்டங்களையும் பொது நூலகங்களில் வாசிப்பை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சி நிரல்களையும் ஏற்பாடு செய்கின்றன. அத்துடன் கலாசார மத்திய நிலையங்கள், கல்வி நிலையங்கள் என்பன வாசிப்புடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்வுகளையும் நடாத்த இலங்கை அரசு பணிக்கிறது. அதிலும் குறிப்பாக குறிப்பிட்ட ஒரு வார காலப்பகுதியை (உதாரணமாக, ஒக்டோபர் 23 முதல் 27 வரை) பாடசாலை நூலக வாரமாக அனுசரிக்கவும் வழிகாட்டியுள்ளது.

இவ்வழிகாட்டல்களுக்கு அமைவாக துணிந்தெழு சஞ்சிகையும் ஒக்டோபர் மாதத்தினை சிறப்பிக்கும் முகமாக அம்மாதம் வெளிவருகின்ற சஞ்சிகையில் வாசிப்பு தொடர்பான அல்லது வாசிப்பை மேம்படுத்துவது தொடர்பான பல்வேறு கட்டுரைகளையும் நேர்காணல்களையும் பிரசுரம் செய்கிறது.

இவ்வருடம் தேசிய வாசிப்பு மாதத்தை பிரகடனப்படுத்தும் முகமாக பேசும் பேனாக்கள் பகுதியூடாக தொடர்ந்து அறிமுகம் செய்யப்படுகின்ற நூல்களின் வரிசையில் பொதுவாக வாசிப்பு பழக்கம் உள்ளவர்களுக்கு பயன் தரும் நூல்களை அறிமுகப்படுத்தலாம் என எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக இக்கட்டுரை வரையப்படுகிறது.

வாசிப்பு என்பது இளையோர்கள் முதல் வயது வந்தவர்கள் வரை எல்லோரும் விரும்புகின்ற ஒரு பொழுதுபோக்காகும் இன்று அவை மருகிவிட்டாலும் கூட வாசிப்பின் மீதுள்ள பற்றுதல் என்பது குறைந்ததாக இல்லை.

உலகின் தலைசிறந்தவர்கள் எழுத்தாளர்கள் பொருளாதார ரீதியில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் என பல்வேறு தரப்பினரின் உயர் அடைவிற்கும் தொடரான முன்னேற்றத்திற்கும் காரணமாக வாசிப்பை அவர்கள் அடையாளப்படுத்துவதை புத்தகங்களூடாகவும் நேர்காணல் செவ்விகளூடாகவும் அறிந்து கொள்ள முடிகிறது.

எழுத்தும் வாசிப்பும் ஒரு மனிதனை முழுமைப்படுத்தும் என்ற ஆன்றோரின் கூற்றுக்கு அமைவாக இச்செயற்பாடுகள் நடந்தேறுவதால் அவர்களின் முன்னேற்றத்திற்கான பாதையை வாசிப்பு அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது என்பதை திடமாக ஏற்றுக் கொள்ள முடிகிறது.

இன்றைய தலைமுறையினரின்

www.magazine.skytamilnews.com



பிற்போக்கை அடையாளப்படுத்துகின்ற போது வாசிப்பு அவர்களிடம் மருகிப்போனதையும் செய்தித்தாள் தொடக்கம் புத்தகங்கள் வரையிலான அவர்களின் தொடர்பு என்பது துண்டிக்கப்பட்டதையும் நூலகங்கள் பராமரிப்பற்று மனித சஞ்சாரம் அற்ற ஒரு இடமாக அடையாளப்படுத்தப் படுவதையும் நூல்கள் வெறுமனே கறை படிந்த கறையான்கள் உண்ணும் ஒரு பகுதியாக இருப்பதையும் ஆதாரங்களாகவும் அடையாளங் களாகவும் எடுத்துக் கொள்ள முடிகிறது.

வாசிப்பின் மீது நாட்டம் இல்லாதவர்கள் அல்லது நேரம் வரையறை செய்ய முடியாதவர்கள் தம் வாசிப்பு பயணத்தை இடைநிறுத்திக்கொள்ளாமல் மேம்படுத் துவதற்காக இன்று பல்வேறு யுக்தி களை கையாளுகிறார்கள். அதில் ஆடியோ வடிவிலான வாசிப்பு முறை உள்ளடங்குவதை காணுகின்ற போது ஓரளவு மனதை தேற்றிக்கொள்ள முடிகிறது.

வாசிப்புப் பழக்கம் இல்லாமல் போவதற்கு நவீன உலகின் தொலைத்தொடர்பு சாதனங்களை ஒரு காரணமாக மனிதன் அடையாளப் படுத்திக் கொண்டாலும் கூட இயல்பாகவே மனிதனில் உள்ள வாசிப்பு ஆர்வம் குறைவாக இருப்பதையும் அவன் ஒத்துக் கொண்டே தான் ஆக வேண்டும் என்பதை இங்கு நான் பதிவு செய்ய நினைக்கிறேன்.

வாசிப்பை நேசிக்கின்ற பெரியோர்கள் அல்லது வாசிப்பின் ஊடாக பல்வேறு அனுபவங்களை கற்றுக் கொண்ட முன்னோர்கள் இப்படிச் சொல்கிறார்கள்.

“நல்ல புத்தகங்களை வாசிப்பது, கடந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த மக்களின் மனதுடனான உரையாடல் போன்றது”
- ரெனே டெஸ்காட்ஸ் -

“வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்”
- ஃபிரான்சிஸ் பேக்கன் -

“புத்தகம் வாசிப்பவன் இறப்பதற்கு முன் ஆயிரம் வாழ்க்கையை வாழ்கிறான். ஆனால், வாசிக்காதவன் ஒரே வாழ்க்கையை மட்டுமே வாழ்கிறான்”
- மார்ட்டின் -

இது போன்ற அல்லது இன்னும் வேறு அறிஞர்களது இக்கூற்றுகளை உற்று நோக்குகின்ற போது வாசிப்பு என்பது வெறுமனே ஒரு பொழுதுபோக்கு அல்ல என்பதும் ஒரு தனி மனித வளர்ச்சிக்கு அல்லது அவனுடைய அறிவியல் சார்ந்த நுணுக்கங்களுக்கு முக்கியமானதொரு செயற்பாடு என்பதையும் உணர்த்துகிறது.

அறிவை விதைத்து, நற்பண்பை வளர்க்கும் சிறந்த விதை வாசிப்பே. ஒவ்வொரு பக்கமும் நம் சிந்தனையை விரிவாக்கி, ஒவ்வொரு சொல்லும் நம் மனதை செழிக்கச் செய்கிறது. இக்கட்டுரையில் வாசிப்புப் பற்றிய தெளிவூட்டலை வாசகர்களுக்கு

www.magazine.skytamilnews.com

இலகுவாக செலுத்தி விட சில நுணுக்கங்க -களை இங்கு நான் கையாளுகிறேன். அந்த நுணுக்கங்களின் பயனாக கேள்வி பதிலூடாக சில பயன் தரும் வாசிப்பு பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்கிறேன். அதன் பிற்பாடு இக்கட்டுரையின் இறுதி பகுதியில் சில நூல்களையும் அறிமுகம் செய்கிறேன்.

## ஏன் வாசிப்பு அவசியம்?

சுருக்கமாகச் சொன்னால் "ஒரு நிமிட வாசிப்பு, ஒரு நாளைக்கு அறிவு ஒரு நாளைக்கு வாசிப்பு, வாழ்க்கைக்கு திறன் ஒரு வாழ்நாள் வாசிப்பு, வாழ்க்கைக்கான வெளிச்சம்"

- அறிவும் அறிவுத்திறனும் வளர்ச்சிக்கு
- சிந்தனை திறன் மற்றும் பிரச்சினை தீர்க்கும் திறனுக்கு
- மனச்சாந்தி மற்றும் மனநிலை நலன் கிடைக்க
- மொழி வளமும் எழுத்துத் திறனும் ஏற்பட
- நற்பண்பும் வாழ்க்கை பாடங்களும் நம்மில் உருவாக
- சுயமரியாதை மற்றும் ஊக்கமூட்டல் நிகழ

## எதை வாசிக்க வேண்டும்?

"வாசிக்க வேண்டும்" என்பதற்கான விடை - எதை வாசிக்கிறோம் என்பதே நம்மை உருவாக்குகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதனால் வயதுக்கும் ஆர்வத்துக்கும் ஏற்ற நல்ல வாசிப்பைத் தேர்ந்தெடுப்பது முக்கியம்.

- புத்தகங்கள்
- பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள்
- சிறுகதைகள் மற்றும் வாழ்க்கைச் சிறுகதை தொகுப்புகள்
- கவிதைகள் மற்றும் மேற்கோள்கள்
- தகவல் நூல்கள்

## யாரை வாசிப்பது?

யாரை வாசிப்பது என்பதன் ஊடாக யாருடைய புத்தகங்களை வாசிப்பது என்ற கருத்தினை கொள்ள முடியும் அல்லது யார் எழுத்தாளனை தேர்வு செய்வது என்று கேட்க முடியும். அதற்கான விடையாக நல்ல சிந்தனை உள்ள நற்பண்புகள் தரும், எழுத்தாளர்களை தேர்வு செய்வது ஒவ்வொரு வாசிப்பு பிரியர்களின் கடமையாகும்.

எழுத்தின் வழியாக நாம் யாரிடம் இருந்து கற்கிறோம் என்பது ஒரு வரலாற்று ஆவணம் என்பதை வாசிப்பு பிரியர் மறந்துவிட முடியாது.

வாசிப்பாளன் தேர்ந்தெடுக்கின்ற எழுத்தாளன் எத்துறையில் பயணிப்பவனாக இருந்தாலும் கூட அவனது சுய சிந்தனை என்பது புத்தகத்தின் ஊடாக வேறொன்று இருக்கக்கூடிய ஒன்று அது நிச்சயம் வாசகனின் மீது பிரதிபலிக்கும் என்பதை அவன் மறந்துவிட முடியாது.

நல்ல வாசிப்பு, கெட்ட வாசிப்பு என இரு வாசிப்புகள் அறிமுகமாகி நின்ற போது நல்ல வாசிப்பின் பக்கமும் அந்த நல்ல வாசிப்பை மேம்படுத்துகின்ற நல்ல எழுத்தாளனையும் தேர்ந்தெடுத்துக் கொள்வதை தான் இங்கு வலியுறுத்தப்படுகிறது.

உதாரணங்களாக :-
சுப்பிரமணிய பாரதியார், திருவள்ளுவர்,

www.magazine.skytamilnews.com

கல்கி, சுஜாதா, ஜெயமோகன், வைரமுத்து, பெரியார், அண்ணா, கலாநிதி அப்துல் கலாம்.

## வாசிப்பதனூடாக கிடைக்கும் பயன்கள் என்ன?

“வாசிப்பதன் ஊடாக கிடைக்கும் பயன்கள் என்ன?” இதுவே ஒவ்வொரு வாசிப்பவருக்கும் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படை உண்மை. வாசிப்பு ஒரு பழக்கம் மட்டுமல்ல, அது அறிவின் கதவு, சிந்தனையின் விளக்கு, வாழ்க்கையின் வழிகாட்டி என்பதை வாசிப்பவர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

வாசிப்பதன் ஊடாக பல்வேறு பயன்கள் கிடைத்தாலும் கூட விதவிதமான தத்துவங்களும் வாழ்க்கை பாடத்தில் செயல் ரீதியாக கண்டு கொள்ள முடியாத அனுபவங்களும் கிடைக்கின்றது என்பதை மறக்க முடியாது.

சில பொதுவான பயன்களை காட்சிப்படுத்த முடிகிறது.

அறிவு வளர்ச்சி, மொழி வளம், சிந்தனைத் திறன், நற்பண்பு வளர்ச்சி, மனச்சாந்தி மற்றும் ஊக்கம், கவனச் சேர்க்கை மற்றும் நினைவாற்றல் மேம்பாடு, படைப்பாற்றல் வளர்ச்சி, உணர்ச்சி அறிவு (Emotional Intelligence), மன உறுதி மற்றும் தன்னம்பிக்கை, சமூக விழிப்புணர்வு, நேரத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்துதல், வாழ்க்கை நோக்கம் தெளிவு.

## எவ்வாறு வாசிப்பை நேசிக்கலாம்?

“எவ்வாறு வாசிப்பை நேசிக்கலாம்?” இதுதான் வாசிப்பின் மந்திரம். நாம் புத்தகத்தை “பாடமாக” அல்ல, “நண்பனாக” பார்க்கத் தொடங்கினால் தான் வாசிப்பு நம் இதயத்தில் இடம் பெறும். அதை வளர்க்க சில எளிய வழிகளைப் பயன்படுத்த வேண்டும்.

- தனக்கு பிடித்தவற்றிலிருந்து தொடங்குவதன் ஊடாக..
- சிறிய அளவில் தொடங்கலாம்..
- புத்தகத்தை நண்பனாகப் பார்ப்பதனூடாக..
- வாசித்ததைப் பகிர்ந்து பேசுவதால்..
- வாசிப்புக்கான சூழலை உருவாக்குவதன் ஊடாக..
- நூலகத்தோடு நட்பு கொள்ளுதலால்
- வாசிப்பை மகிழ்ச்சியாக மாற்றுவதால்
- வாசிப்பை அனுபவமாக மாற்றுகின்ற படியினால்
- புத்தகத்தைப் பதிவு செய்வதால் (Reading Journal)
- வாசிப்புக்கான இலக்கை அமைக்கின்றமையினால்
- வாசிப்புக் கூட்டங்கள் / குழுக்கள் சேர்ந்து அமைப்பதால்
- உத்வேகம் தரும் இடங்களை வாசிப்பதால்
- வாசிப்பின் பயன்களை உணர்வதால்
- வாசிப்பை வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்ளுவதால்

இது போக இன்னும் கேள்விகளை உருவாக்கலாம் அவைக்கான பதில்களை தேடலாம்.

இம்மாதம் “பேசும் பேனாக்கள்” பகுதியில், எழுத்தின் ஆற்றலை உணர்த்தும், சிந்தனையை ஊக்குவிக்கும் சில சிறந்த நூல்களை உங்களுக்காக அறிமுகப்படுத்துகிறோம். வாசிப்பை ஒரு பழக்கமாக அல்ல, ஒரு வாழ்க்கை நடைமுறையாக மாற்றுவதுதான் இம் முயற்சி.

www.magazine.skytamilnews.com

**பொதுவான வாசிப்பு நூல்கள்.**

1. பொன்னியின் செல்வன் - கல்கி
வரலாறு, காதல், அரசியல் எல்லாவற்றையும் இணைக்கும் மகத்தான தமிழ் காவியம்.

2. சிலப்பதிகாரம் - இளங்கோ அடிகள்
தமிழின் பண்பாட்டையும் நீதியையும் பிரதிபலிக்கும் காலத்தால் அழியாத இலக்கியம்.

3. உலகம் சுற்றும் உலா - சு.வெங்கடேசன்
புதிய இடங்கள், மனிதர்கள், பண்பாடுகள் பற்றி வாசிப்பரசை ஊக்குவிக்கும்.

4. திருக்குறள் - திருவள்ளுவர்
வாழ்க்கையின் எல்லா துறைகளுக்கும் வழிகாட்டும் மாபெரும் நூல்.

5. யானை டயரி - சுஜாதா
அறிவியல், நகைச்சுவை, சிந்தனை சுவையாக கலந்த எழுத்து.

இன்னும் பல நூல்கள் இருக்கின்றன குறிப்பிட்டு என்னால் சொல்ல முடிந்த சில நூல்கள் இவை.

**பிற மொழியில் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்கள்.**

1. மனிதனாகி மாறியவன் (The Alchemist) - பாவ்லோ கோய்லோ
கனவுகளைத் துரத்தும் வாழ்க்கை தத்துவப் பயணம்.

2. மனிதனின் தேடல் (Man's Search for Meaning) - விக்டர் பிராங்கல்
வாழ்வின் நோக்கத்தைக் கண்டுபிடிக்க ஊக்கமளிக்கும் ஆழமான சிந்தனை.

3. சின்ன இளவரசன் (The Little Prince) – ஆன்டுவான் டி சைன்ட்-எக்ஸுபெரி
எளிய கதையின் வழியே அன்பும் மனிதநேயமும் பேசும் அற்புதம்.

4. சிந்தனை மாற்று (The Power of Positive Thinking) – நார்மன் வின்சென்ட் பீல்
நம்பிக்கையையும் மன வலிமையையும் வளர்க்கும் நூல்.

5. 1984 - ஜார்ஜ் ஆர்வெல்
சுதந்திரம், அதிகாரம், உண்மை குறித்து சிந்திக்க வைக்கும் அரசியல் கற்பனை.

இதன் வரிசையில் இன்னும் தொடர்ந்து அதிகமான நூல்கள் காணப்படுகின்றன.

**பாடசாலை மாணவர்கள் வாசிக்க உகந்த நூல்களாக.**

1. திருக்குறள் - திருவள்ளுவர்
ஒவ்வொரு பாடசாலை மாணவரும் படிக்க வேண்டிய சிறந்த நூல். சுருக்கமான வரிகளில் வாழ்வியல் அறிவு நிறைந்தது.

2. பாரதி கவிதைகள் - சுப்பிரமணிய பாரதியார்
தேசப்பற்று, துணிவு, சுயமரியாதை ஆகியவற்றை ஊக்குவிக்கும் சக்திவாய்ந்த வரிகள்.

3. விழியின்றி கனவு காணும் மனிதர் - ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
எளிமையாக எழுதப்பட்ட வாழ்க்கை அனுபவங்கள் மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டும்.

4. சின்னச் சின்ன கதைகள் - நா. பார்த்தசாரதி / சுஜாதா
நகைச்சுவை, சிந்தனை, அறிவியல் ஆர்வம் ஆகியவற்றை தூண்டும் சிறுகதைகள்.

5. அம்மா சொல்லும் கதைகள் - இளம் தமிழ் கதைகள் தொகுப்பு

நல்லொழுக்கம், பண்பாடு, அன்பு ஆகியவற்றை குழந்தைகள் எளிதாக உணர்வதற்கான நூல்.

6. The Little Prince (சின்ன இளவரசன்) – Antoine de Saint-Exupery
குழந்தை மனம், அன்பு, வாழ்க்கை அர்த்தம் குறித்து மெல்லிய சிந்தனையை அளிக்கும்.

7. Charlotte's Web – E.B. White
நட்பு, நம்பிக்கை, தியாகம் ஆகியவற்றை கற்பிக்கும் இனிய குழந்தைநூல்.

8. Harry Potter தொடர் – J.K. Rowling
கற்பனை உலகம் வழியாக தைரியம், நட்பு, நம்பிக்கை ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

9. Malgudi Days – R.K. Narayan
இந்திய குழந்தைகள் வாழும் உலகத்தை நகைச்சுவையுடனும் நம்பிக்கையுடனும் சொல்வது.

10. The Story of My Experiments with Truth – மகாத்மா காந்தி
சத்தியம், நேர்மை, மன உறுதி குறித்து சிறந்த வாழ்க்கை வழிகாட்டி.

சென்ற இதழின் வெற்றி பல நூல்கள் அன்பளிப்பு பலரது அறிமுகம் இன்னும் சிலரது ஆக்கபூர்வமான கருத்துகள் இவைகளோடு இந்த இதழில் இன்னும் தொடர்கிறேன்.

உங்களின் ஆக்கங்களையும் நூல் உரைகளையும் எமக்கு அனுப்பலாம். அறிமுகம் செய்ய சிலாகித்து பேச உரைகள் எழுத பிரசுரம் செய்ய நாம் தயாராக உள்ளோம்.

பயணம் தொடரும்.....

அனுப்ப வேண்டிய முகவரி:-

**துணிந்தெழு சஞ்சிகை,**
**பேசும் பேனாக்கள் பகுதி,**
**எம்.ஜே.ஜவ்சன் அஹமட்**
**148,வீசி வீதி, பெரிய நீலாவணை-02**
**மருதமுனை, கல்முனை.**
**0760200387**




ஆக்கம் :-
**எம்.ஜே.ஜவ்சன் அஹமட்**
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

www.magazine.skytamilnews.com

# நூல் வெளியீடு பற்றிய தகவல்கள்

## 01. “இம்மை துறக்கம் எழிலமிகு துபை”

காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தியின் எழுதிய “இம்மை துறக்கம் எழிலமிகு துபை” காவியம் நூல் வெளியீடு துபாயில் உள்ள கிரான் பிளாசா ஹோட்டலில் பிரபல தொழிலதிபர் புரவலர் அனுசரணையாளர் அபுதாஹீர் தலைமையில் இராப்போசன விருந்துடன் 04.10.2025 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்று.










www.magazine.skytamilnews.com

# 02. “மௌன ஓசை”

கஹடோவிட்ட கவிதாயினி ருஷ்தா லுக்மான் எழுதிய “மௌன ஓசை” நூல் வெளியீட்டு விழா 11.10.2025 ஆம் திகதி சனிக்கிழமை கஹடோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சர்க்கல் கட்டிடத்தில் நடைபெற்றது.








www.magazine.skytamilnews.com

# 03. “ஏழாம் வானத்தின் சிறகுகள்”

கவிஞர் பாத்திமா நளீரா எழுதிய “ஏழாம் வானத்தின் சிறகுகள்” கவிதை பிரதி வெளியீடு 12.10.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு டி.ஆர் விஜயவர்த்தன மாவத்தையில் உள்ள தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.









www.magazine.skytamilnews.com



தகவல் சேகரிப்பு :-
**எம்.ஜே.ஜவ்சன் அஹமட்**
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# எனது விழிகள்

## கருப்பொருள் : கலாச்சாரம்

### இம்மாத சிறந்த புகைப்படங்கள்


Mathavarajah nithurshan
kalmunai


Faris Amanullah
Qatar


K.Mahadevan
Thamilnadu


Fathima shara
Akurana


Mufeetha Ameen
Akkaraippathu


NHM.Siyaj
Katpitti


MSM. Risath
Addalaichenai


M.S.Shafky Ahamed
mawanella

www.magazine.skytamilnews.com




# திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள இயற்கையின் பொக்கிஷங்களில் ஒன்றான கன்னியா வெந்நீர் ஊற்று

www.magazine.skytamilnews.com

இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 261 கிலோமீட்டர் தூரத்தில் கன்னியா வெந்நீர் ஊற்று அமைந்துள்ளது. அதே போல் திருகோணமலை நகரிலிருந்து 4 கிலோமீட்டர் தூரத்தில் இதை சென்றடைய முடியும்.



இயற்கை அருட்கொடைகளில் ஒன்றான இவ் இடத்தை பார்வையிடுவதற்கு தினந்தோறும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தருகின்றார்கள். அப்படி இங்கு என்னென்ன அற்புதங்கள் இருக்கலாம் என்று நீங்களும் ஒரு கணம் யோசிக்கலாம்.

ஆம்! இங்கு இயற்கையால் வழங்கப்பட்ட அற்புதம் காணப்படுகின்றது. கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் சதுர வடிவை கொண்ட ஏழு கிணறுகள் ஒன்றுக்கொன்று மிக அருகில் அமைந்துள்ளன. 3-4 அடி ஆழத்தை கொண்ட கிணறுகளாகவே இது காணப்படுகின்றது. இதன் அடிப்பகுதியைக் கூட தெட்டத் தெளிவாக பார்க்கும் அளவுக்கு இங்கு காணப்படும் வெந்நீர் ஊற்று தெளிவாக காட்சியளிக்கின்றது. வெந்நீர் ஊற்றுகளுக்குச் செல்வது உங்களுக்கு ஒரு சிறந்த அனுபவமாக இருக்கும். இதற்கு முன்பு வெந்நீர் ஊற்றுக்குச் சென்றிராதவர்களுக்கு இது ஒரு புதிய நல்ல அனுபவமாக இருக்கும்.

இந்த இடம் பொதுவான சனி, ஞாயிறு தினங்களிலும் இலங்கையின் அரச விடுமுறை நாட்களிலும் அதிக மக்கள் இங்கு வருகின்றமையால் எந்தளவுக்கு என்றால் இங்கு வெந்நீர் ஊற்றில் குளிப்பது கூட அதிக நேரத்தை செலவிடுவதற்கு காரணமாக அமைகின்றது. மேலும் குளித்து முடித்தவர்களுக்கு ஆடைகளை மாற்றிக் கொள்வதற்கு ஆண், பெண்






என்று ஆடைமாற்றும் இடங்களும் காணப்படுகின்றன. குறிப்பாக இங்குள்ள கிணறுகள் ஒவ்வொன்றின் வெப்பநிலையும் ஒன்றுக்கொன்று சற்று வித்தியாசமாக இருக்கும். கிணறுகளில் இருந்து வரும் நீர் நோய்களை குணப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது என நம்பப்படுகிறது. ஏனென்றால் நீரில் பல்வேறு தாதுப் பொருட்கள் கலந்து உள்ளதாகவும் ஆய்வுகளின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தக் காலப்பகுதியில் கூட இவ்விடம் பல்வேறு தொல்பொருட்களில் பெரும்பாலானவை பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள வெந்நீர் கிணறுகள் பிரதேச சபையால் இங்கு வைக்கப்பட்டுள்ள அறிவிப்புப் பலகையின் பிரகாரம் சுமார் 5000 வருடங்களுக்கு முன்னர் நாட்டை ஆண்ட இராவண மன்னன் காலத்துக்கு முற்பட்டது என்று வரலாறுகள் சான்று பகிர்கின்றது. குறிப்பாக இப்பிரதேசத்தில் தமிழ்-சிங்கள மக்கள் உரிமை கோரும் பல்வேறுபட்ட இன ரீதியான பிரச்சினைகள் சில வருடங்களுக்கு முன்பு இடம் பெற்றது. இந்த இடத்தில் வரலாற்று சிறப்பு மிக்க பொக்கி‘ங்களை பாதுகாக்கும் முகமாக அரசு இதனை தொல்லியல் திணைக்களத்துக்கு 09.09.2011 ஆண்டு காலப்பகுதியில் உள்வாங்கப்பட்டு அரசாங்க வர்த்தமானி எண் 1723 இன் கீழ் அறிவிக்கப்பட்டது. இப்போது அரசினால் பராமரிக்கப்பட்டும் வருகின்றது. இங்கு அனுராதபுர காலத்தின் முற்பகுதியைச் சேர்ந்த ஒரு ஸ்தூபி மேடு மற்றும் கி.பி. 1-2 நூற்றாண்டுகளுக்கு முந்தைய காலப்பகுதியை சேர்ந்த கல்வெட்டு ஆகியவை அந்த இடத்தில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன.



www.magazine.skytamilnews.com








*1834 ஆம் ஆண்டின் சிலோன் கெசட்டியரில், விநாயகருக்குப் புனிதமான ஒரு கோயிலின் எச்சங்கள் வெந்நீர் கிணறுகள் உள்ள இடத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.*

*1955 இல் வெளியிடப்பட்ட பயணிகளுக்கான கையேட்டில், கன்னியாவில் உள்ள ஏழு வெந்நீர் ஊற்றுகள் பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கு புனிதமானவை என்று விவரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு விஷ்ணு கோவில் மற்றும் ஒரு மசூதியின் இடிபாடுகள் அந்த இடத்திற்கு அருகில் ஒன்றாக இருப்பதாக கூறப்படுகிறது.*

*இப்படியே கன்னியா வெந்நீர் ஊற்றின் சிறப்பம்சங்களை சொல்லிக் கொண்டே போகலாம் அந்தளவு வரலாற்று ஆவணங்களை அதை பறைசாட்டுகின்றன. உங்களுக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்தால் இந்த இடத்தை பார்வையிடுவதற்கு ஒரு நபருக்கு 50 ரூபா செலுத்தி பார்வையிட்டு, எமது வரலாறுகளை தெரிந்து கொள்ள முடியும்.*

**எஸ்.ஐ.எம்.நிப்ராஸ் (JP),**
**ஊடகவியலாளர்**

www.magazine.skytamilnews.com

# நடப்பின் கதைகள்

இருள் கிழிக்கும் கிழக்கு வானம்
விழிக்கும் விழிகளுக்கும்
புவியின் விடியலுக்கு
என்ன நிறம் என்று
தெரிவதில்லை

விடிகிறது அந்தி சாய்கிறது
அழகோடு மலரும் மலர்களின்
புன்னகை அலைமோதும்
மனிதனுக்கு புரிவதில்லை

உதிரும் இலைகளோடு உறவாட
நேசமும் இல்லை
பாடும் குயிலோசை கேட்காமல்
செவிகளுக்கும் சாவியிட்டே
சோகமாய் சிலர்

நீல வானும் விரிந்த கடல் வெளியும்
சேரும் காதல் மொழியும்
தெரிவதில்லை கனபேருக்கு

பனித்துளி சுமக்கும்
புல்வெளி வெறிச்சோடி
பாய் விரித்துத் துயில்கிறது
பார்வையற்ற மானிடர்களால்

வசந்த காலம்
இலையுதிர் காலம்
இணைய வழித் தேடலுக்குள்
பசுமைக் கானகம் காண
புகைப்படம் தேடும் விழிகள்..

நேரத்தின் சுருக்கங்கள்
காலத்தின் கோலங்கள்
கனவுகளாகும் வாழ்க்கைப் பாதை
வறண்டு கிடக்கிறது
பாலைவனமாய்

முகம் பார்த்துப் புன்னகைக்க நேரமில்லை
அன்பு மொழியால் அரவணைக்க
அவகாசமில்லை
மாறுதல் இல்லா மனிதக்
குணங்களின் மாயாஜாலம்

இந்த யுகம் இழந்த மகிழ்வின் இரகசியம்
காணத் துடிக்கிறேன்
கடந்த வரலாற்றுப் பக்கங்களை
படித்துப் படித்து
மனக்கண்ணுக்குள் புதைந்திருக்கும்
நாட்களைத் தேடியே....

**ஆக்கம்:**
**சேஹூ மொஹம்மது பெனாஸிரா**

www.magazine.skytamilnews.com

துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## துணிந்தெழு சஞ்சிகை நடாத்தும்

# கவிதைப் போட்டி - 2025

**கவிதையின் கருப்பொருள்**

**மனிதனும் செயற்கை நுண்ணறிவும்**

உங்கள் கவிதைகளை WHATSAPP மூலமாக அனுப்பி வைக்க முடியும்

**+94767620601**

**இறுதித் திகதி : 10-நவம்பர்-2025**

சான்றிதழ் மற்றும் சிறப்பு பரிசுகளை வெல்லுங்கள்

நிபந்தனைகள்

## போட்டி நிபந்தனைகள்:

1. ஆண்,பெண் இருபாலாரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.
2. வயதெல்லையின்றி அனைவரும் பங்குபற்றலாம்.
3. கவிதைக்கு பொருத்தமான தலைப்பு இடுதல் வேண்டும்.
4. அனுப்பும் கவிதைகள் 16 வரிகளைக் கொண்டதாகவும் ஒரு வரிக்கு 4 சொற்கள் கொண்டதாகவும் அமைதல் வேண்டும்.
5. உங்கள் கவிதைகளை அனுப்புமிடத்து எழுத்துப் பிழைகளின்றி அனுப்புதல் கட்டாயமானது.
6. போட்டிக்காக ஒருவர் ஒரு கவிதை மாத்திரமே அனுப்ப முடியும்.
7. உங்களால் அனுப்பி வைக்கப்படும் கவிதைகள் எமது நடுவர்களால் தெரிவு செய்யப்படும்.
8. தேர்ந்தெடுக்கப்படும் வெற்றிக்குரிய கவிதைகள் துணிந்தெழு சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.
9. விதிமுறைகளுக்கு உட்படாத கவிதைகள் போட்டிக்குள் உள்வாங்கப்படமாட்டாது.
10. வெற்றி பெறும் முதல், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பிடிக்கும் கவிதைகளுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும். அத்துடன் சிறந்த 10 கவிதைகளுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
11. உங்கள் கவிதைகளை அனுப்பி வைக்கும் போது அதனுடன் உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், புகைப்படம் என்பவற்றையும் அனுப்புதல் வேண்டும்.



# சக்கரை நோய்க்கு முற்றுப்புள்ளி

**உசாத்துணை நூல் (டாக்டர் காமராஜ் இன் சக்கரை நோய்க்கு முற்றுப் புள்ளி)**

இனிப்பு நிறைய சாப்பிட்டால் தான் சக்கரை நோய் வரும் என்று பலரும் நினைக்கிறார்கள். அது தவறு பிறகு எதைவைத்து சர்க்கரை நோய் வரும் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறார்களா?

- குடும்ப பிண்ணனி
- எடை
- உடல் செயல்பாடு குறைவு
- இரத்த அழுத்தம் / கொலஸ்ட்ரோல் அதிகரிப்பு
- வயது
- pcod யால் பாதிக்கப்பட்ட பெண்கள்
- உடல் பருமன்

### சக்கரை நோய் வராமல் தடுக்க..

- உணவு முறையில் மாற்றம் செய்ய வேண்டும்.
- ஊட்டச்சத்துள்ள உணவுகளை சாப்பிட வேண்டும்.
- எடை குறைக்க முயற்சி செய்ய வேண்டும்.
- அதிக நார்ச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும்.
- மாமிச உணவை தவிர்த்து இயற்கையான காய்கறிகள் மற்றும் பழங்களை சாப்பிட வேண்டும்.
- தொடர்ந்து உடற்பயிற்சியில் ஈடுபடுவது நல்லது.

### அனைவரும் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டியவை

- முப்பது முதல் நாற்பது வயது ஆகிவிட்டால் ஆண்டுக்கு ஒரு முறை சக்கரை நோய் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.
- குடும்பத்தில் யாருக்கேனும் சர்க்கரை நோய் இருந்தால்
- நீங்கள் அதிக எடையைக் கொண்டு இருந்தால்
- எவ்வளவு சாப்பிட்டாலும் காரணமே இல்லாமல் எடை குறைந்தால்
- உடல் உழைப்பு இல்லாமல் இருந்தால்
- காரணமே இல்லாமல் அலர்ஜி மலச்சிக்கல் இருந்தால்
- மன இறுக்கம்
- அதிக பசி
- மிகுதியான தாகம்
- அடிக்கடி சிறுநீர் கழித்தல்
- காயங்கள் ஆறாத நிலை

போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்ளுங்கள். விட்டமின் மாத்திரைகளை எடுத்துக் கொண்டபின் சிறுநீர் பரிசோதனை செய்ய வேண்டாம். இதனால் சிறுநீரில் தவறான முடிவுகள் தெரிய வாய்ப்புள்ளது.

ஆண்டுதோறும் கண், இதயம், பொது உடல் பரிசோதனை மேற்கொள்வது நல்லது. அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அறுவை சிகிச்சை செய்ய முன்பும் பின்பும் சக்கரை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். உங்கள் கை, கால்களில் புண்கள் மற்றும் காயங்கள் ஏற்பட்டாலும், ஒரு வேளை ஏற்பட்டால் அவை வேகமாக ஆறுகின்றனவா என்பதையும் கவனிக்க வேண்டும்.

அளவுக்கு மீறிய களைப்பு ஏற்படுவதாக இருந்தால் இதய பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.

www.magazine.skytamilnews.com




## நம் உடலில் சக்கரையின் அவசியம் என்ன?

• சக்கரைதான் நமது உடல் உறுப்புகள் வேலை செய்வதற்கு தேவையான எரிபொருளாக செயல்படுகிறது.
• உள் உறுப்புகள் அனைத்தும் ஓய்ந்துவிடாமல் தொடர்ந்து செயல்பட்டு கொண்டே இருக்க ரத்தத்தில் சர்க்கரை சத்து எப்போதும் இருந்து கொண்டிருக்க வேண்டும்.
• சக்கரை சத்து குறைந்துவிட்டால் மூளை தனது செயல் திறனை இழந்து விடும்.
• மயக்கம், சுய நினைவு இழத்தல், கோமா போன்ற பிரச்சினைகள் உண்டாகும்.

## சக்கரை நோய் வந்த பிறகு கட்டுப்படுத்த மிகவும் எளிய ஐந்து வழிகள்

- உடற்பயிற்சி
- உணவு முறை
- எடை குறைத்தல்
- சுயமாக உங்களை நீங்களே கவனித்துக் கொள்வது
- மருந்து மாத்திரைகளை தவறாமல் எடுத்துக் கொள்வது
- ரத்தச்சக்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்

சக்கரை நோய்தானே பார்த்து கொள்ளலாம் என்று இருந்தால் பிரச்சினைகள் ஏவுகணை வேகத்தில் வந்து விடும். இதனால் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே இறந்து போதல், உடல் உறுப்புகள் செயலிழந்து போதல், கண்கள், சிறுநீரகம், இதயம் போன்ற உள் உறுப்புகள் பாதிக்கப்படல், பக்கவாதம் மற்றும் நரம்பு தளர்ச்சி போன்ற பல்வேறு இன்னல்களை ஏற்படுத்தும்.

பிறவியிலேயே சர்க்கரை நோய் இருந்தால் மருந்து மாத்திரைகள் தான் ஒரே வழி. இடையில் நோய் ஏற்பட்டு மருந்து மாத்திரைகளை சாப்பிட்டால் கணையம் இன்சுலினை உற்பத்தி செய்யும். ஆனால் சர்க்கரையின் அளவு அதிகமாக இருந்தால் மாத்திரைகள் எதிர்பார்த்த பலனை தராது அத்தகைய சூழலில் இன்சுலினை மட்டுமே நம்பியிருக்க வேண்டியிருக்கும்.

## ரத்தச்சக்கரை கட்டுப்பாடு

பட்டினியாக இருக்கும் போது : 90~130 mg
சாப்பிட்டு 2மணி நேரத்தில்: 180mg க்குள்
ரத்த அழுத்தம்: 130/80 க்கும் குறைவாக
எடைகுறைத்தல்: இடுப்பின் சுற்றளவு 32cm க்குள்

## கொழுப்பு அளவு:

எல்.டி.எல் கொழுப்பு 100 mg குறைவாகவும்
டிரைகிளிசைரடு 150mg குறைவாகவும்
எச்டில் கொழுப்பு 40mg அதிகமாக இருக்க வேண்டும்.

இவற்றை எல்லாம் மருத்துவரின் நேரடி மேற்பார்வையில் செய்து வந்தால் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தலாம். சக்கரை நோயாளிகள் சரியான உணவு முறையையும் உடற்பயிற்சி முறைகளையும் பின்பற்றினால் சக்கரை நோயை கட்டுப்படுத்தலாம். உணவு முறை - குறையினும் மிகினும் நோய் தரக்கூடியது. உணவு - அளவோடு உண்டால் தான் அது அமிர்தம். அளவுக்கு மிஞ்சினால் அதுவும் நஞ்சாகும். ஒரு வேளை உண்பவன் போகி (இல்லறத்தின்) மூன்று வேளையும் உண்பவன் ரோகி (நோயாளி) என்பார்கள். சக்கரை நோயாளிகள் தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நல்ல உணவுகளை சாப்பிட வேண்டும். முறையான உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும்.

**கவலை வேண்டாம் இனி இயல்பான வாழ்க்கை சாத்தியம்.**

தொகுப்பு:
றிஹானா அன்வர்ஷா இஷாக்
(கலாபூஷணம்)

www.magazine.skytamilnews.com

# சிறுவர் பகுதி



## இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்



வண்ண வண்ண மலர்கள் போல
சின்னச் சின்னப் பாலர் நாம்!

தோற்றத்தில் நாம் ஒன்றானாலும்
ஆற்றலில் என்றும் தனிரகம்தான்!

பாட்டுப் பாடும் பாலனுக்கோ
ஏட்டில் எழுத விருப்பமில்லை.

கணக்கில் புலியாம் கலாவுக்கு
கவிதை ரசிக்கத் தெரியவில்லை.

தமிழில் முதல்வன் தயாளனுக்கோ
துளியும் சரித்திரம் பிடிக்கவில்லை.

ஓவியம் வரையும் கல்யாணிக்கு
ஒளித்து விளையாட ஆசையில்லை.

விளையாட்டில் வீரன் விக்ரம்தான்
வாய்ப்பாடு அவனுக்கு மனனமில்லை.

கைப்பணி செய்வாள் கலாதேவி
வாசிப்பில் பெரிதாய் ஆவலில்லை.

இன்னுமின்னும் எங்களிலே
மின்னும் தாரகைகள் எத்தனையோ...

தனித்தனியாய் ஒளிர்ந்திடவே
தனியிடம் எமக்குத் தருவீரோ?

எங்களுக்குள்ளும் கனவுகளுண்டு
எம்மைத் துருவி அறிவீரோ?

நாளைய உலகை ஆள்வதற்கு
நம்பிக்கைதனை விதைப்பீரோ?

மக்கொனையூராள்

துணிந்தெழு
மாதந்தோறும் | இதழ் - 44 | ஒக்டோபர் 2025



# முடிவில்லா சிறுவர் தினம்

ஒற்றை நாளில் மட்டும்
செதுக்கி விட முடியாது
இந்தக் குதூகலங்களின் கனதியை

வாய் வார்த்தைகளில் மட்டும்
அளந்து விட முடியாது
இந்த வாழ்க்கையின் வசந்தத்தை
நிஜமாகவே கொண்டாடித் தீர்த்திட வேண்டும்.

மழலை மொழி மரகத சிரிப்பு
முதல் ஓட்டம் முயலாமை
தோற்றல் வண்டிப் பயணம்
வருகை திண்ணம் அழுவது சங்கீதம்
ஆராதனை புறக்கணிப்பு

உண்பது கொஞ்சம்
உடுத்துவது அசத்தல்
பஞ்சமின்றிப் பேச்சு
படுத்தால் நினைவின் மூச்சு
சண்டைக் கோழி சாகசச் செம்மல்
வாயாடும் சொற்கள்
வந்தனமின்றி நிற்றல்.

இப்படி இப்படி
எவ்வ்வ்.....வ்வவ....ளவோ.....

சொல்லில் அடக்க முடியாச்
சித்திரங்கள் அவை
அவர்களின் குறும்புகள்.

“எப்போதும் குழந்தைகளாகவே
இருந்திருக்கலாம்” எனும் பக்குவப் பேச்சு
குழந்தைத்தனத்தின் நிஜ நிமிடங்களை
தொலைத்துவிட்ட தொன்மங்களை
அசைபோட வைக்கின்றன.
மறுபடியும் இன்னொரு நாள்
வரத்தான் போகின்றது
இத்தினம் இருந்தாலும்,
வாழ்வை வசப்படுத்தித்
தந்தவனின் கைகளில்
உயிர் இருக்கும் போது...
ஏன் கஞ்சத்தனம்?

வாழ்த்துக்களை அள்ளி வழங்குங்கள்
அன்பை கொள்ளையாகக் கொடுங்கள்
நாளை உங்களுக்காயும் பொழுது புலரும்.

ஆக்கம்:
பயாஸா பாஸில்

www.magazine.skytamilnews.com



# ஹோட்டன் சமவெளியில் நீலப் புரட்சி: 12 ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் நீலக்குறிஞ்சி

இலங்கையின் மத்திய மலைநாட்டின் உச்சியில், 2100 மீட்டருக்கும் அதிகமான உயரத்தில் அமைந்திருக்கும் ஹோட்டன் சமவெளி தேசியப் பூங்கா, தற்போது (2025) ஓர் அரிய இயற்கை நிகழ்வால் உலகை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் தனித்துவமான நீலக்குறிஞ்சி மலர்கள், அல்லது உள்ளூர் மொழியில் "நீலு" அல்லது "நீலா" என அழைக்கப்படும் இந்தத் தாவரங்கள், மலைச் சரிவுகள் முழுவதையும் ஊதா-நீலப் போர்வையால் போர்த்தி, "நீலப் புரட்சிக்கு" வித்திட்டுள்ளன.

நீலக்குறிஞ்சியின் வரலாறானது, காலனித்துவக்கால ஆவணங்களில் நுட்பமாகக் குறிக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் தோட்டக்காரரான தாமஸ் ஃபார் (Thomas Farr), ஹோட்டன் சமவெளியில் 1881, 1893 மற்றும் 1905 ஆகிய ஆண்டுகளில் நீலக்குறிஞ்சி மலர்கள் பூத்ததை முதன்முதலில் ஆவணப்படுத்தினார். இந்த அவதானிப்புகள், நீலக்குறிஞ்சியின் துல்லியமான 12 ஆண்டு பூக்கும் சுழற்சியை உறுதிப்படுத்தின.

இந்தத் தொடர்ச்சியான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே 2001, 2013 மற்றும் தற்போதைய 2025 ஆம் ஆண்டுகளிலும் இந்தப் பூக்கள் பூத்துள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள மலைவாழ் பழங்குடிச் சமூகங்கள், இந்த 12 ஆண்டுச் சுழற்சியையே தங்களின் வயதைக் கணக்கிடப் பயன்படுத்தினர். இது நீலக்குறிஞ்சிக்கும், மலைவாழ் மக்களின் கலாச்சாரத்திற்கும் இடையிலான ஆழமான பிணைப்பைக் காட்டுகிறது.

தமிழ் இலக்கியமான சங்க இலக்கியத்தில் மலையும் மலை சார்ந்த இடமும் "குறிஞ்சித் திணை" எனப் பிரிக்கப்பட்டதன் மூலமும் இதன் தொன்மை நிலைநிறுத்தப்படுகிறது.

செமல்பாரிட்டியின் சூட்சுமம் நீலக்குறிஞ்சியின் தனித்துவமான இயல்பு அதன் தாவரவியல் பெயரான "ஸ்ட்ரோபிலாந்தஸ்" (Strobilanthes) பேரினத்தில் பொதிந்துள்ளது. இந்தத் தாவரத்தின் 12 ஆண்டு பூக்கும் சுழற்சி, "செமல்பாரிட்டி" (Semelparity) எனப்படும் ஓர் அரிய படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டினால் உருவானதாகும்.

நீலக்குறிஞ்சி ஒரு மோனோகார்பிக் தாவரம். அதாவது, தன் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே பூத்து, விதைகளை உருவாக்கிவிட்டு மடிந்துவிடும். சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இதனை “தாயின் மரணத்தில் இருந்து பிறக்கும் பூ” என்று வர்ணிக்கின்றனர்.

பன்னிரண்டு ஆண்டுகள் முழுவதும் சேமித்த ஆற்றலை ஒரே நேரத்தில் பயன்படுத்தி, ஒரு பரந்த நிலப்பரப்பில் உள்ள அனைத்துச் செடிகளும் ஒரே சமயத்தில் பூக்கும் நிகழ்வு “சமகாலப் பெருமலர்ச்சி” (Synchronized Mass Flowering) எனப்படுகிறது. இந்த நிகழ்வே, அதன் இனப்பெருக்க வெற்றியை உறுதிப்படுத்தும் மிகச்சிறந்த தற்காப்பு உத்தியாகும்.

ஒரே நேரத்தில் கோடிக்கணக்கான மலர்கள் பூப்பதால், 10-க்கும் மேற்பட்ட தேனீ இனங்கள் மற்றும் வண்ணத்துப்பூச்சிகள் பெருமளவில் ஈர்க்கப்படுகின்றன. இது, மகரந்தச் சேர்க்கை தவறாமல் நடக்க உத்தரவாதம் அளிக்கிறது. திடீரென உருவாகும் அதிக எண்ணிக்கையிலான விதைகளை, விதைகள் உண்ணும் விலங்குகளால் முழுமையாக உட்கொள்ள முடியாது. இதன் மூலம், அடுத்த சுழற்சிக்கான விதைகள் மண்ணில் புதைந்து, பிழைப்பதற்கான வாய்ப்பைப் பெறுகின்றன.

இலங்கையின் தனித்துவமான நீலக்குறிஞ்சி மலர்கள் ஹோர்ட்டன் சமவெளியின் தனித்துவமான சூழல் அமைப்பின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும். இந்த அரிய நிகழ்வு, சூழலியல் ரீதியாகவும், பல்லுயிர் வளத்தின் குறியீடாகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

இலங்கையில் 31 வகையான நீலக்குறிஞ்சி இனங்கள் உள்ளன. இவற்றில் ஆச்சரியமூட்டும் விதமாக 26 இனங்கள்



இலங்கைக்கு மட்டுமே உரித்தானவை. இது, ஹோர்ட்டன் சமவெளியின் பல்லுயிர் வளத்திற்கு ஒரு முதன்மைச் சான்றாகும்.

நீலக்குறிஞ்சியிலிருந்து கிடைக்கும் தேன் தனித்துவமான மருத்துவக் குணங்கள் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. மேலும், இந்தத் தாவரத்தின் பல்வேறு பாகங்கள் வீக்கத்தைக் குறைக்கும். வலி நிவாரணம் அளிக்கும் மற்றும் ஆக்ஸிஜனேற்றப் பண்புகளைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஹோர்ட்டன் சமவெளியின் காட்சி, நீலப் பெருங்கடல், பசுமையான புல்வெளிகள், நீலக்குறிஞ்சிப் பூக்கும் காலத்தில், ஊதா, இளஞ்சிவப்பு, வெள்ளை மற்றும் இளநீல நிறப் பூக்களால் ஆன கம்பளத்தால் மூடப்பட்டு, கண்கொள்ளாக் காட்சியளிக்கிறது. இந்தப் பூக்கன்றுகள் அரை மீட்டரிலிருந்து ஒரு மீட்டர் வரை

www.magazine.skytamilnews.com



உயரம் கொண்டவை. இவற்றிற்கு வசீகரமான வாசம் இல்லாவிட்டாலும், ஒரு மென்மையான வாசம் இருப்பதாகவும், அதுவே மகரந்தச் சேர்க்கைக்கு உதவுகிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பூத்த பின் மடியும் செடிகள், மண்ணுக்கு ஊட்டமளித்து, கிறிஸ்டிசோனியா (Christisonia) போன்ற அரிய ஒட்டுண்ணி தாவரங்கள் வளர்வதற்கும் இடமளிக்கின்றன. இதனால் நீலக்குறிஞ்சி, இந்தச் சூழலியல் சங்கிலியின் ஒரு முக்கியமான இணைப்பாகத் திகழ்கிறது.

பாதுகாப்பு அச்சுறுத்தலும், நீலக்குறிஞ்சியின் பூக்கும் சுழற்சி மற்றும் வாழ்விடத்தின் மீதான மனிதத் தலையீடுகள், அதன் நீண்டகால இருப்பிற்குப் பெரும் சவாலாக மாறியுள்ளன.

வாழ்விட அழிவு, தட்பவெப்பநிலை மாற்றம், காடழிப்பு, மற்றும் அன்னியத் தாவரங்களின் ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களால், நீலக்குறிஞ்சி இனம் குறிப்பாக (Strobilanthes kunthiana) தற்போது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN) சிவப்புப் பட்டியலில் “ஆபத்துக்குள்ளாகும் இனம்” (Vulnerable) எனப் பட்டியலிடப் பட்டுள்ளது. தாமஸ் ஃபார்ரால் தொடங்கப்பட்ட ஆய்வுகள் இன்றும் தொடர்கின்றன. அண்மைய ஆய்வுகள், நீலக்குறிஞ்சியின் இலைச் சாறுக்கு வயிற்றுப் புண் எதிர்ப்பு மற்றும் ஆக்ஸிஜனேற்றப் பண்புகள் இருப்பதாகக் கண்டறிந்துள்ளன. இந்த ஆய்வுகள் அதன் மருத்துவப் பயன்பாடுகளுக்கான சாத்தியக்கூறுகளைத் திறந்துள்ளன.

தற்போதுள்ள நீலக்குறிஞ்சிப் பெருமலர்ச்சியைக் காண உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் படையெடுத்துள்ளதால், பூங்காவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், மலர்களைப் பறிப்பதைத் தடுக்கவும், குறிக்கப்பட்ட பாதைகளில் மட்டுமே பயணிக்க அறிவுறுத்தவும் காவல்துறை மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆக்கம்:
**எம்.எம்.எப்.நுஸ்ரத்**
கொழும்புப் பல்கலைக்கழகம்
மடலஸ்ஸ கெகுணகொல்ல

# தந்தையே! என் வாழ்வின் அற்புதம்

என் நம்பிக்கையின் ஆழமான வேரே!
நான் கண்ட உலகின் முதல்
பேராச்சரியமே என் அப்பா!
அன்னையின் பரிவுக்கு மாறாக
உறுதியின் வடிவமாய் ஆளுமையின்
திண்மையாய் நிற்பவரே!

குடும்பம் என்னும் மலர்ச் செடிக்கு
என்றும் வாடாத ஆணிவேராய்
திகழ்பவரே!
என் வாழ்வுக்குப் பொருள் தந்தவரே!
நாளெல்லாம் தனக்கெனச் சிறிதும் நாடாத
நமக்காகவே வாழும் தன்னலமற்ற
உழைப்பாளி!
கைரேகைகள் தேய்ந்து போகும் வரை
மனதில் சலிப்பின்றி
நம் பசி போக்க
சொட்டச் சொட்ட வியர்வை சிந்தி
நமக்காய் உழைக்கும் ஒளிரும் விளக்கே!

வாழ்க்கை என்னும் பெரும் பாரத்தை
தோளிலும் மார்பிலும் சுமக்கும்
வலிமைமிகு சுமைதாங்கியே!
குடும்பம் என்னும் வானின் ஓய்வற்ற
சூரியனே!

சமுதாயத்தால் விதிக்கப்பட்ட சுமைகள்
அனைத்தையும்
நமக்காக மட்டுமே சுமக்கும் குடும்பத்
தலைவனே!

பாசத்தில் தாயைப் போலவும்
ஊக்கமளிப்பதில் குருவாகவும்
நம் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும்
நிழலாய் நம்மை நகர்த்திச் செல்லும்
வழிகாட்டியே!

அர்ப்பணிப்பையே உயிராய் கொண்டவரே!
கருவில் சுமக்காமலே நெஞ்சில் சுமந்து
எம்மைக் கருவில் சுமந்தவளையும் எம்
உயிர்களையும்
உன் ஆயுள் வரை தாங்கி நிற்கும்
வலிமையாளரே!

கண்ணில் சோர்வு இருந்தாலும்
கலையாத கனவுகளைச் சுமந்தவரே!
தன் சட்டை கிழிந்தாலும்
நம்மைப் பட்டுத் துணியில் அழகு பார்த்து
தன் துணியைக் கசக்கிக் கட்டுபவரே!
உன் ஆசைகளைத் துறந்து எமக்காய்
வாழும் உனக்கு
கிடைக்கும் பட்டப்பெயரோ “கஞ்சன்“
என்னும் வார்த்தை!

எம் சிரிப்பின் சிற்பியே!
வாழ்விற்கு ஓய்வின்றி ஒளியாய்
உழைத்தவரே!
என்றும் எக்காலத்திலும் என் வாழ்வின்
இறைவனே!

திருமதி. மதுவர்மன்
இத்தாலி

# ஊடகத் துறையில் குலசிங்கம் கிலசனுக்கு இளங்கலைஞர் விருது




கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இலக்கிய விருது விழாவில் குலசிங்கம் கிலசனுக்கு ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருது கிடைக்கப்பெற்றது.

கடந்த 9 வருடங்களாக ஊடகத்துறையில் பல தடைகளையும் கடந்து தனித்துவமான இடத்தை தன்னுடைய திறமைகளால் தக்கவைத்திருக்கும் இளம் துடிப்புள்ள ஊடகவியலாளராக வலம் வருகிறார்.

கிராமத்தில் பிறந்தாலும் முயற்சியும் பயிற்சியும் இருந்தால் வானொலியிலும் தடம் பதிக்கலாமென நிரூபித்திருக்கிறார் கிலசன். அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேசத்தின் 7ம் கிராமத்தில் குலசிங்கம் புஸ்பலதா தம்பதியினரின் மூத்த மகனான கிலசன் ஊடகத்துறையில் கொண்ட காதலால் 2016ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் அறிவிப்பாளராகவும் சுயாதீன ஊடகவியலாளராகவும் பணியாற்றி வருகிறார்.

தாய், தந்தையினுடைய ஆசிகளோடும் துணைவி பவித்ராவின் ஒத்துழைப்போடும், பல நல்லுள்ளங்களின் ஆசிகளோடும் ஆதவன் வானொலி, தாளம் எப்.எம், புன்னகை வானொலி, கனேடியத் தமிழ் வானொலி ஆகியவற்றில் நிகழ்ச்சித் தொகுப்பாளர் மற்றும் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றியதோடு கல்முனை நெற் ஊடகத்தின் நெறியாளராகவும், பரிமாணம் பத்திரிகையின் இணையாசிரியராகவும், தமிழ்த்தந்தி பத்திரிகையில் பிராந்திய நிருபராகவும் பணியாற்றி தற்போது ஸ்கை தமிழ் ஊடகத்தின் நிருபராகவும், துணிந்தெழு சஞ்சிகையின் இணையாசிரியராக இளங்கலைஞர்களை உலகறியச்





செய்வதிலும் ஊடகத்துறையில் தனது பங்களிப்பை செய்து வருகிறார்.

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றி வருகின்ற போதிலும் இவர் ஊடகத்துறையில் தனது பங்களிப்பை ஆற்றுவதற்காக சுயாதீன ஊடகவியலாளராக செயற்பட்டு வருகிறார்.

அத்தோடு கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் ஊடக இணைப்பாளராகவும் ஆன்மீக சொற்பொழிவாற்றி வருகிறார். இவருக்கு கடந்த *2019* இல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிறந்த அறிவிப்பாளருக்கான தேசிய விருதும், *2022*இல் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலைஞர் சுவதம் விருதும் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமின்றி இவர் கவிதைத் துறையிலும் தனது கன்னி நூலை வெளியிடுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இணையாசிரியராக மற்றும் நிருபராக செயற்படும் குலசிங்கம் கிலசன் அவர்கள் இளங்கலைஞர் விருதுப் பெற்றமைக்கு துணிந்தெழு சஞ்சிகை மற்றும் ஸ்கை தமிழ் ஊடகம் சார்பாக மனதார வாழ்த்துகிறோம்.

Congratulations

www.magazine.skytamilnews.com



# மது ஒழிப்பு

களிப்பென வந்தது களிம்பு
வாழ்வை விழுங்கும் கருங்கடல் அது
அன்பின் குடும்பம் சிதறும் கனவுகள்
சாம்பலாகும்


மதுவது நஞ்சு என
மனித மனதை மயக்கும்
தந்தை அழியும்
தாய் துயரும்
பிள்ளை கண்ணீர் சிந்தும்

ஒளி தரும் பாதை ஒன்றே
ஒழிப்பு தான் வாழ்வின் வெற்றியே
அன்பு தரும் கைகள் பிடித்தால்
அமைதி மலரும் உலகமெங்கும்

மது இல்லா நாளை நோக்கி
மனிதம் நடந்திட வேண்டும்
உலகம் நிம்மதி பாடட்டும்
நம் வாழ்வு சுதந்திரம் காணட்டும்

**பாத்திமா சுபியானி**
**புத்தளம்**

# ஆசிரியர் எனும் ஏணி..!



ஆசிரியர் என்கின்ற ஏணி அவர்
அறிவின் வெற்றியை அடைய வைப்பார்
மாணவர்களை உயர்த்துவதுதான்
அவர்களது நோக்கமே அறிவை
வழங்குவது
ஆசானின் நிலை அது இறைவனிடத்திலும்
உயர்ந்த நிலை

ஆசிரியர் எனும் ஏணியே அறிவின்
மேடைக்கு மாணவனை ஏற்றி விடும்
மனதில் விதைக்கும் நல்ல சிந்தனைகளை
மனிதனென உருவாக்கும் பண்புத் திறன்கள்
அவர்கள் அறிவோடு அறிவியலும்
ஒழுக்கமும் நம்பிக்கையும்
என அனைத்தையும் கற்றுத்தான்
தருவார்கள் அதனால்தான்
ஆசானுக்கு மரியாதை கொடுக்க வேண்டும்

**றிஹானாஹ் முகம்மட் காசிம்**
**சாய்ந்தமருது**

www.magazine.skytamilnews.com

# துணிந்தெழு பெண்ணே!



துணிந்தெழு பெண்ணே!
துயர் நீங்கிடும்
துணிந்தெழு பெண்ணே!
துரோகிகள் எல்லாம் மறைந்திடுவர்
அகிலத்திற்கு அச்சாணி நீயென பறைசாற்றிடுவர்!

வலுவான பெண்ணாக வலம் வர
சுயதொழில் ஒன்றை தேர்ந்தெடு
பயிற்சிகள் பல பெற்றிடு
விமர்சனங்களை கடந்திடு
நிதானமாக பேசிடு
சூழ்நிலைகளை சுதாகரித்துக்கொள்
சூழ்ச்சிகளை எல்லாம் வென்றிடு
சுயமாக உழைத்திடு
உளமார மகிழ்ந்திடு

உலகின் சக்தி நீயென உணர்த்திடு
மங்கை இல்லாத மண்
வாசனை இல்லாத மலர் என மற்றவர் உரைத்திட
உதாரணமாக இருந்திடு

இன்னும் பல சேவைகள் செய்திடு
இமயம் நீயென உரைத்திடு
இல்லத்திற்கு அரசி நீயென வாழ்ந்திடு
அகிலத்திற்கும் அச்சாணி நீயென
பறைசாற்றிடு வரலாறும் உன்னை
பேசிடும் ஓர்நாள்

மங்கையே நீ
மனதளவில்
மலை போல் வலிமையானவள் என்று
மண்ணின் வரலாறுகள் பறைசாற்றிட
சாதனைகள் படைத்திடு

வீரப்பெண் நீயென்று
வீரகாவியங்கள்
விளக்கம் கொடுக்கும்
விலை மதிப்பற்ற இரத்தினமும் நீயென்றே
வியந்தே பேசட்டும்

தட்டிக்கேள் அநியாயங்களை
தகர்த்தெறி தடைகளை
அள்ளிக்கொடு அன்பினை
கிள்ளி எறி துரோகத்தை

மதித்திடு சட்டத்தை
மிதித்திடு மட்டமானவற்றை
தீட்டிடு திட்டத்தை
வகுத்திடு கொள்கைகளை

ஊருக்காக உழைத்திடு
உண்மைக்காக குரல் கொடுத்திடு
உலகம் உன்னை போற்றிடும்
வரலாறும் உன்னை பேசிடும்

ஜெனிதா மோகன்
நற்பிட்டிமுனை

www.magazine.skytamilnews.com

# தேயாத ஊர்தி



தேவைக்கு வந்த பின்
தேயாத ஊர்தி இல்லை
தேயவில்லை எனில் அது  பாதையோடு
ஓடவில்லை
ஓடாமல் ஒட்டிக் கொண்டால்
புதுப் பாதை நீளுமா!

தேய மறுக்கும் சக்கரங்களுக்கு
ஊர்தியோடு உறவில்லை
அவ் உறவை ஏற்ற ஊர்திகளுக்கு
பாதைகளோடு பழக்கங்கள் இல்லை

பழக்கங்கள் இல்லா ஊர்தியை
பாவித்து வழக்கங்கள் ஆக்க
பயண புழக்கத்தில் உள்ள
பயணிகளுக்கு விருப்பம் இல்லை

பயணங்கள் கிட்டாத வாழ்வில்
பாதைகள் கிட்ட வாய்ப்பில்லை
பாதைகள் கிட்ட வில்லை எனில்
இலக்குகள் எட்ட இலகுவில்லை

தேவை என்றால் ஓயாமல்
தேய்ந்துதான் ஆக வேண்டும்
தேய மறுப்பவரோடு இணைந்தால் தேவை
தீராமலே ஓய்ந்தாக வேண்டும்

பாதைபடாமல் தேயாமல் ஓய்ந்திருக்கும்
பாதணி என்பதால்
பாய் விரித்துப் பார்வைக்கு விடுவதில்லை

பயன்பாட்டில் இருப்பதினாலே
பாதையோடு உரையாடிடும்
பலர் பார்வையில் உலாவிடும்
பூட்டிக்கிடப்பதில் என்ன பெருமை

பாதையோடு ஊறாத ஊர்தி
தேவையேடு சேராத சேர்மானம்தான்
தேயாத ஊர்தி
இது தேவைப்படாத ஊர்தி.

நாகராஜா பவதாகர்

www.magazine.skytamilnews.com

# Google -க்கு செக் வைக்கும் ZOHO-வின் `Ulaa browser' - என்ன ஸ்பெஷல்?




இந்தியாவில் வாட்ஸப்பிற்கு மாற்றாக **'ZOHO'** நிறுவனம் "அரட்டை" ஆப்பை வெளியிட்டு செக் வைத்திருக்கிறது. இதையடுத்து கூகுள் குரோம் பிரவுசருக்கு செக் வைத்திருக்கிறது.

உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் வெப் பிரவுசர்களான **'Google, Chrome, Safari'** க்கு சவால் விடும்படியாக இந்திய நிறுவனமான **ZOHO** நிறுவனத்தின், **'Ulaa'**என்ற பிரவுசரை வெளியிட்டு இருக்கிறது.

இது ஆண்ட்ராய்டு, ஐபோன் என இரண்டு தளங்களிலும் வெளியிடப்பட்டிருக்கிறது. **'Ulaa (உலா)'** என்றால் சுற்றுலா, உலவுதல், பயணம் போன்றவற்றை குறிக்கக்கூடிய தமிழ் சொல்லையே இந்த பிரவுசருக்கு பெயராக வைத்துள்ளனர். உலாவின் லோகோ கிட்டத்தட்ட குரோமை போலவே வடிவமைக்கப்பட்டிருக்கிறது.


2023-லேயே மினிமம் டிசைனில் கொண்டுவரப்பட்டது இந்த பிரவுசர். ஆனால் சரியான பார்ட்னர்ஷிப் இல்லை, மார்க்கெட்டிங் இல்லை எனப் போன்ற பல காரணங்களினாலும் அப்பொழுது இந்த பிரவுசர் மக்களை அதிகமாக சென்றடையவில்லை.

இப்பொழுது **ZOHO**-வின் அரட்டை ஆப், **ZOHO Mail**-ஐ மத்திய அமைச்சர்கள், அமித் ஷா உள்ளிட்டோர் "**Made in India** நம் நாட்டு பொருட்களை பயன்படுத்தலாம், தொழில்நுட்பத்தில் தன்னிறைவைப் பெற வேண்டும்" என ஆதரவளித்து பிரபலப்படுத்தி வருகின்றனர்.

அதைத்தொடர்ந்து **ZOHO**வின் இந்த **'Ulaa'** பிரவுசரும் ட்ரெண்டாகி வருகிறது.

## ZOHO என்னதான் சொல்றாங்க?

www.magazine.skytamilnews.com




டேட்டா ட்ரான்ஸாக்ஷன், டேட்டா பிரைவசி போன்றவற்றை வைத்து ஒரு உலகப் போரே கூட வரலாம் என்று கூறி வருகின்றனர்.

அந்த அளவிற்கு முக்கியத்துவம் பெற்று இருக்கிறது. நமது தரவுகளை பாதுகாக்கக்கூடிய **'data privacy'.** ஆனால், இந்த பிரைவசி இப்பொழுது எந்த பிரவுசரிலும் கொடுக்கவில்லை என்று கூறி வருகின்றனர்.

உதாரணமாக நாம் ஒரு ப்ராடக்டைப் பிரவுஸ் பார்க்கிறோம் என்று தெரிந்தால் அதே பிராடக்டையோ அல்லது நாம் பிரவுசரில் தேடியது சம்பந்தமான விளம்பரங்களாக வந்துகொண்டே இருக்கின்றன.

இப்படி நம் தரவுகளுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறதா என்று கேட்டால் ஒரு கேள்விக்குறிதான்.

ஆனால் **'Ulaa (உலா)'** பிரவுசரில் டேட்டா பிரைவசி 100% இருக்கின்றது என்று **'ZOHO'** நிறுவனம் கூறுகிறது. அதாவது நீங்கள் பிரவுஸ் செய்வதையோ உங்களது தரவுகளையோ மூன்றாவது நபராக **(Third Parties)** யாருமே பார்க்க முடியாது என்று உறுதியளிக்கிறது.

உலா பிரவுசரை **'A first privacy browser'** என்றும் மார்க்கெட் செய்கிறார்கள்.

## விதவிதமான பிரவுஸிங் வசதிகள்


**'Google, Chrome'** போன்றவற்றில் நாம் தேடும் விஷயங்களை இதிலும் தேடலாம். இதுபோக என்ன ஸ்பெஷலான வசதிகள் இதில் இருக்கின்றன என்று கேட்டால், நான்கு விதமான பயன்முறைகளை இதில் கொடுக்கின்றனர்.

- பர்சனல் மோட் **(Personal Mode),**
- டெவலப்மென்ட் மோட் **(Development Mode)**
- கிட்ஸ் மோட் **(Kids mode)**
- ஓபன் சீசன் மோட் **(Open Season Mode)**

பர்சனல் மோடில் உங்களுக்கு பர்சனல் ஆக எது வேண்டுமானாலும் நீங்கள் பிரவுஸ் செய்து கொள்ளலாம்.

டெவெலப்மென்டல் மோடில் நீங்கள் எந்தவிதமான வேலை பார்க்கிறீர்களோ அது தொடர்பாக அல்லது திறன் மேம்பாட்டு சம்பந்தமாகவும் பார்த்துக் கொள்ளலாம். கிட்ஸ் மோடு என்பது

www.magazine.skytamilnews.com




பெற்றோரின் கட்டுப்பாட்டோடு **(Parental control)** இயங்கக்கூடிய மோடாகும். உங்களின் குழந்தையின் வயதுக்கு மீறிய கன்டென்டுகளை எல்லாம் தவிர்த்து /பில்டர் செய்து கொடுக்கிறது. ஓபன் சீசன் மோடு என்றால் எந்தவித தடைகளும் இல்லாமல்**(No restrictions)** எதை வேண்டுமானாலும் பிரவுஸ் செய்து கொள்ளலாம்.

## Data privacy எங்கே..?

டிஜிட்டல் இறையாண்மையை மேம்படுத்தி இந்திய அரசு நடத்திய போட்டியில் டிஜிட்டல் தரவுகளை பாதுகாப்பதில் “உலா” வெற்றி பெற்றிருக்கிறது. இருந்தாலும் இந்த “உலா” பிரவுசர் கண்ட்ரோலர் ஆ◌ஃப் செர்டிபையிங் அத்தாரிட்டிஸ் **(Controller Of Certifying Authorities -CCA )** கீழ்தான் இயங்க வேண்டியது இருக்கின்றது.

அதாவது பயனர்களின் தரவை மாற்றி அமைக்க உலாவில் உள்ள இணைய நெறிமுறைகளை **CCA** வால் கையாள முடியும் என்கின்ற பட்சத்தில் டேட்டா பிரைவசி என்பது எங்கே இருக்கின்றது என்று பலரும் கேட்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் **'google, chrome'** போன்ற வெப் பிரவுசரில் ஏதேனும் சிக்கல் வரும் என்றால் தகுந்த எச்சரிக்கைகளை கொடுக்கும். ஆனால் “உலா“ பிரவுசரில் இது போன்ற எச்சரிக்கைகள் என்பது எந்த அளவிற்குத் துல்லியமாக நம்மை வந்து சேரும் என்பது ஒரு சந்தேகம்தான்.




## Ulaa vs Google

“உலா” பிரவுசர் இந்திய நாட்டைச் சார்ந்தது என்பதால் அதை பயன்படுத்துவது எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது என்று இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் பலர் கூறி வருகின்றனர்.

இன்னும் ஒரு சிலர் “உலா பிரவுசரை யூஸ் பண்ணுவது பாதுகாப்பானது தானா?” என்பதையே கூகுளில் தான் தட்டிப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

அது மட்டுமல்லாமல் **'google, chrome'** என்று ஜெயண்ட் / பீச்சர்ஸைக் கொண்ட

www.magazine.skytamilnews.com

www.magazine.skytamilnews.com




வெப்சைட்டை பல ஆண்டுகளாக பயன்படுத்திப் பழகி இருக்கிறோம் என்பதால் திடீரென்று உலாவிற்கு மாறுவதற்கும், உலா பிரவுசர் மக்களை சென்று அடைவதற்கும் கொஞ்சம் கஷ்டம் தான் என்றும் சிலர் கூறி வருகின்றனர்.

அப்படியே ZOHO கூறுவது போல் உலாவில் பிரைவசி இருந்தாலும் வெறும் பிரைவசி, ப்ராடக்ட்டிவிட்டி என்கின்ற இரண்டு / பீச்சர்ஸை மட்டுமே மையமாக வைத்து அதிகப்படியான ஆடியன்ஸைக் கவர் பண்ண முடியுமா என்பது சந்தேகம்தான்.

அஸ்ரி இப்னு அமீர்
பிரதி முகாமையாளர்
துணிந்தெழு சஞ்சிகை





# திரை விமர்சனம்




# நீதியின் குரலான ஜெய் பீம்

ஜெய் பீம் திரைப்படம் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் திகதி இந்தியாவின் சட்டத்திட்டங்களை உள்ளடக்கியதான தமிழ் மொழி மூலம் வெளிவந்த திரைப்படமாகும்.

இத்திரைப்படத்தை டி.சே.ஞானவேல் இயக்க 2d என்டர்டைன்மென்ட் நிறுவனம் தயாரித்து வழங்கியிருந்தது. இத்திரைப்படத்தில் சூர்யா, பிரகாஷ்ராஜ், ரஜிஷா விஜயன், லிஜோமோல் ஜோஸ் ஆகியோர் நடித்திருந்தார்கள்.

இத்திரைப்படத்தின் இசை வடிவமைப்பை ஷால் ரோல்டன் வழங்கியிருக்க, ஒளிப்பதிவுகளை எஸ்.ஆர்.கதிரும் படத்தொகுப்பினை பிலோமின் ராஜ் உம் வழங்கியிருந்தனர். மொத்தமாக 164 நிமிடங்களை கொண்ட இத்திரைப்படம் IMDb-யில் மிகவும் உயர்ந்த மதிப்பெண் பெற்ற இந்திய படங்களில் ஒன்று. அத்துடன் சமூக வெற்றிப்படம் என்றே சொல்ல வேண்டும்.

1993 காலப்பகுதியில் நடைபெற்ற நிஜ வாழ்வியலை எடுத்துக்காட்டும் சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு இத்திரைப்படம் வடிவம் பெறுகிறது. இருளர் சாதிக்கு நடந்த அநீதியை அடிப்படையாகக் கொண்டு இத்திரைப்படம் எழுதப்பட்டிருப்பதும் அந்த அநீதிக்கான நீதியைத் தேடும் விதத்தில் அவ் இனத்துப் பெண் ஒருத்தி வழக்கறிஞர் ஒருவரை நாடுகிறார்.

அதாவது இருளர் சாதியைச் சேர்ந்த செங்குனி மற்றும் ராஜாக்கண்ணு தம்பதியினரை பின் தொடர்வதாக இத்திரைப்படம் அமைந்திருக்கிறது. ராஜாக்கண்ணு என்னும் நபர் காவலாளிகளால் திட்டமிட்டு தாக்கப்படுவதும் அவர் செய்யாத ஒரு தப்பை அவர் ஒத்துக் கொள்ள வேண்டும் என அவர்கள் கொடுக்கின்ற துன்புறுத்தலின் பின்னர் காவல் நிலையத்தில் இருந்தவர் காணாமல் போகிறார். இப்படி காணாமல் போன தன் கணவனுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற போராட்டத்தில் இத்திரைப்படத்தில் வழக்கறிஞர் சந்துருவை அதாவது சூர்யாவை அப்பெண் நாடி செல்கிறார்.

இத்திரைப்படத்திற்கான அதிகபட்ச காட்சிகள் சென்னை மற்றும் கொடைக்கானலில் படமாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. கோவிட் 19 காரணமாக படப்பிடிப்புகள் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் அதே ஆண்டு ஜூலை மாதம் படப்பிடிப்புகள் தொடர்கிறது அதன் பின்னர் செப்டெம்பரில் இப்படத்திற்கான அத்தனை காட்சிகளும் நிறைவு பெறுகின்றன.

நடிகர்கள்...

சூர்யா - கே. சந்துரு
லிஜோமோல் ஜோஸ் - செங்கேணி
கே. மணிகண்டன் - ராஜாக்கண்ணு
ரஜிஷா விஜயன் - மைத்ரா
பிரகாஷ்ராஜ் - ஐ.ஜி. பெருமாள்சாமி
ராவ் ரமேஷ் - ஏ.ஜி. ராம் மோகன்
குரு சோமசுந்தரம் - அரசு வழக்கறிஞராக செல்லப்பாண்டியன்
எம். எஸ். பாசுகர் - சங்கரன்
ஜெயப்பிரகாசு - துணை காவல் துறை இயக்குநர் இராதாகிருஷ்ணனாக
சிபி தாமஸ் - காவல் கண்காணிப்பாளர் அசோக் வரதனாக
இளவரசு - குணசேகரன்
ஜெயராவ் - கதிர்வேல்
சுஜாதா - சுப்புலட்சுமி கதிர்வேலாக
இரவி வெங்கட்ராமன் - இன்ஸ்பெக்டர் பாஷ்யமாக
தமிழ் - எஸ்.ஐ. குருமூர்த்தி
குமரவேல் - இன்ஸ்பெக்டர் ஆல்பி ஆண்டனி
சூப்பர் குட் சுப்பிரமணி - வீராசாமி
பாலஹாசன் - கிருபாகரன்
“ராஜா ராணி” பாண்டியன் - ராஜன்

கதைக்களம் :-
மலையடிவாரத்தில் வசிக்கின்ற மக்களுக்கு காவல்துறையினரால் பல்வேறு அநீதிகள் இழைக்கப்படுகின்றன. சில அரசியல்வாதிகளை தப்பிக்க வைப்பதற்காக வேண்டி எந்த தவறும் செய்யாத மலை அடிவார மக்களை கைது செய்து அவர்கள் மீது அத்தனை பலிகளையும் சுமத்தி அவர்களை குற்றவாளிகள் என நிரூபிப்பதும், இன்னும் சில நேரங்களில் அவர்களை இடம் தெரியாமல் அழித்து விடுவதுமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அநீதிக்கு எதிராக அதை கண்டித்து போராடிய வழக்கறிஞர் சந்துருவின் உண்மை கதையாக அமைகிறது.

www.magazine.skytamilnews.com

www.magazine.skytamilnews.com

1993 ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மலையடிவாரத்தில் வாழும் பழங்குடியினர் பொருளாதார ரீதியில் கல்வி அறிவு இல்லாமலும் வாழ்ந்து வருகிறார்கள். காவலர்கள் அவர்களுடைய கடமையை நிறைவேற்ற பழங்குடி மக்களை தாக்கி அவர்களது வாழ்வாதாரத்தைக் கெடுத்து அவர்கள் மீது பொய் வழக்குகளை சுமத்தி சிறையில் அடைக்கிறார்கள். காவலர்களின் இந்த அநாகரீகமான செயல்களைக் கண்டித்து நீதிமன்றத்தில் பல வழக்குகளை கொடுக்கிறார் சந்துரு எனும் சூர்யா.

இதனால் மக்களுக்கு மத்தியில் ஒருபுறம் எதிர்ப்புகளை சந்துரு சந்தித்தாலும் பழங்குடி இனருக்கு மத்தியில் தெய்வத்துக்கு நிகராக போற்றப்படுகிறார் சூர்யா.

அக்கிராமத்தலைவரின் இல்லத்தில் ஒரு திருட்டு சம்பவம் நடைபெறுகிறது. அந்த திருட்டிற்கு சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்படும் ராஜாக்கண்ணு அதாவது மணிகண்டன் காவலாளர்களால் கொடூரமாக தாக்கப்படுகிறார். அவருடைய மனைவி செங்கேணி அதாவது லிஜோமோல் மற்றும் அவரது உறவினர்கள் அனைவரும் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

முதல் காட்சியில் சிறையில் இருந்து சிலர் வெளியே வருகிறார்கள். சிறை வாசலில் நிற்கும் காவலர் ஒருவர் ஒவ்வொருவரின் சாதியை கேட்கிறார். அதில் பழங்குடியினத்தை சேர்ந்தவர்களை மட்டும் ஓரமாக நிற்கச் சொல்லிவிட்டு மற்றவர்களை செல்லுமாறு கூறுகிறார்.

சிறையில் இருந்து வெளியே வந்த பழங்குடியினத்தவர்களை நிலுவையில் இருக்கும் வழக்குகளில் சேர்க்க பொலிஸார் வாகனங்களுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வழக்குகள் அதிகமாகவும், ஆட்கள் குறைவாகவும் இருப்பதாக பொலிஸ்காரர் ஒருவர் கூறுகிறார். அதற்கு மற்றொருவரோ, "ஒருத்தன் மீது ஒரு கேஸ் தான் போடணும்னு சட்டம் இருக்கா என்ன, தலைக்கு இரண்டு கேஸ் போடுங்க" என்கிறார்.

இது போன்ற காட்சிகளால் அதிகாரத்தில் இருப்பவர்கள் பாவப்பட்ட மக்களை எப்படி கொடுமைப்படுத்துகிறார்கள் என்பதையும் பொலிஸாரின் அட்டூழியத்தையும் ஜெய்பீம் அழகாகக் காட்டுகிறது.

ஒரு கட்டத்திற்கு மேல் சிறையில் அடைக்கப்பட்ட ராஜாக்கண்ணுவை காணவில்லை என காவலர்கள் மீண்டும் செங்கனியை தொந்தரவு செய்ய துவங்குகிறார்கள். இதனை பொறுத்துக் கொள்ள முடியாத செங்கனி பல போராட்டங்களில் பின்னர் வழக்கறிஞர் சந்துரு அதாவது சூர்யாவை சந்திக்கிறார். அவர் ஊடாக நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தொடர்கிறார். இப்படி இங்கிருந்து கதை துவங்குகிறது.

வழக்கறிஞர் சந்துரு வழக்காடுவதில் மிக தீவிரத் தன்மை காட்டுகின்ற மிக அறிவாற்றல் உள்ள ஒருவராக இங்கு காட்சிப்படுத்தப்படுகிறார். அவர் இது தொடர்பில் திடுக்கிடும் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறார். இதனால் அரசாங்க அதிகாரிகள் பலரது உண்மை நிலை மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தப்படுகிறது. அதற்கான முழு முயற்சியையும் வழக்கறிஞர் சந்துரு அதாவது சூர்யா மேற்கொள்கிறார்.

கைது செய்யப்பட்ட ராஜாக்கண்ணுக்கு என்ன ஆனது? அவருடன் இருந்த அவரின் தம்பி மற்றும் உறவினர்கள் எங்கே? இவர்களை கண்டறிந்து இவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒரு வழக்கறிஞரின் போராட்டம் தொடர்வதை இப்படத்தின் மீதி கதை உணர்த்தும்.

இங்கு வழக்கறிஞராக காட்சிப்படுத்தப்படும் சந்துரு அதாவது சூர்யா ஒரு வழக்கறிஞராக ஒருவர் அறிமுகப்படுகின்ற போது அவருக்கு இருக்க வேண்டிய அடிப்படை தன்மைகளை கொண்டவராகவும், மேலதிகமான சிறப்பு தன்மைகளை அவர் எவ்வாறு பெற்றிருக்க வேண்டும் என்பதையும் உணர்த்தும் விதத்தில் இதில் பல்வேறு வழக்குகளை அவர் வழக்காடுவதை காணலாம். அவருடைய உடல் அமைப்பு, அவருடைய ஆடை அமைப்பு என்பன இதில் பெரும் செல்வாக்கு செலுத்துவதையும் அவரின் பேச்சாற்றல் இங்கு தலை சிறந்து விளங்குவதையும் மிக உன்னிப்பாக அவதானிக்க முடிகிறது.

இத்திரைக்கதையை எழுதிய எழுத்தாளர்




இதில் ஒவ்வொரு விடயங்களையும் மிக உன்னிப்பாக அவதானித்திருக்கிறார். பட காட்சிகள் முழுவதும் மங்கல் வெளிச்சத்தில் இருந்தாலும் பார்ப்பவர்களின் மனோநிலை பழங்குடி மக்கள் பாவம் அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற ஒரு மனநிலையை இங்கு உருவாக்குகிறது.

பழங்குடி மக்களான இருளர் சாதியின் கடைசி நம்பிக்கையாக கருதப்படும் இறுதித் தீர்ப்பு என்னவாக இருக்கும் என்ற கேள்விக்குறியே பட துவக்கத்தில் இருந்து முடியும் வரை பார்ப்போர் மனதில் புரையோடிக் கிடக்கும் நிலையாகும். இந்நிலையில் ஒட்டுமொத்த விடையும் இறுதி கட்டத்தில் யுக பாரதியின் பாடல் வரிகளோடு முடிவடைவதை காணலாம்.

ஒட்டுமொத்த வலிகளையும் உள்ளடக்கியதாக பாடப்பட்ட அப்பாடல் வரிகள் இறுதிக்கட்ட பாடலாக இருந்தாலும் ஒட்டுமொத்த படக் காட்சியின் வலிகளையும் பொதிந்ததாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இத்திரைப்படத்தில் நடித்த அத்தனை கதாபாத்திரங்களும் மிக உன்னிப்பான அவதானிப்பின் பின்னர் எடுகோள்களாக எடுக்கப்பட்ட முன்மாதிரி கதாபாத்திரங்கள் என்று சொல்ல வேண்டும். அப்படி தத்ரூபமாக தங்களின் நடிப்புத் திறமைகளை இங்கு அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

படத்தில் அரை மணி நேரத்திற்குப் பிறகு தான் சூர்யாவின் கதாபாத்திரமே வருகிறது.

“போராடுவோம் போராடுவோம் நீதி கிடைக்கும் வரை போராடுவோம்” - படத்தோட கதையை அப்படியே சொன்ன மாதிரியான கோஷம் அவருடைய ஆரம்பக் காட்சி.

பழங்குடியின மக்களின் வாழ்வியலை சரியான கதை பின்புலத்தோடு வழி நடத்துகிற விதம் அருமையிலும் அருமை. எலி பிடித்து உண்ணுகிற காட்சி, காட்டுப்பன்றியை உணவாக உட்கொள்ளுதல், பாம்பு பிடிப்பதாக இருந்தாலும் சரி, பாம்பு கடித்தவர்களுக்கு விஷத்தை முறிக்கக் கூடிய இடமாக இருந்தாலும் சரி அவர்களுடைய பழங்குடியின வாழ்க்கையை மிகச் சரியாக பதிவிட்டு இருக்கிறார் இயக்குனர்.
சாதியப் பாகுபாடு என்பதில் மேல் சாதி, கீழ் சாதி என்பது நகர்ப்புறத்தில் தான் இருக்கும் என்று பார்த்தால் அது பழங்குடி இன மக்களிடையேயும் இருக்கிறது என்பதை பிரதிபலித்துக் காட்டுகிறது “ஜெய்பீம்” திரைப்படம்.

காவல்துறை அதிகாரிகள் என்றால் அவர்கள் எப்போதும் ஈர குணமற்றவர்கள், என்றும் மக்களிடம் வரி வசூலிப்பது, அதுபோல லஞ்சம் வாங்குவது மட்டும் இவர்களின் பண்பென பல திரைப்படங்கள் வெளிப்படுத்திக் காட்டினாலும் இத்திரைப்படத்தில் பெருமாள் சாமி கதாபாத்திரத்தில் நடிக்கும் பிரகாஷ்ராஜ் எல்லோராலும் கவனிக்கப்பட வேண்டியவரும் காவல்துறை அதிகாரிகள் இடத்திலும் ஈகை குணமும் உதவி செய்கின்ற மனப்பாங்கு உள்ளது என்பதை நிரூபிப்பதாகவே அமைகிறது.

தன் கணவருக்காக நீதி கேட்டுப் போராடும் செங்கேணி அதாவது லிஜோமால் ஜோஸ் இந்த நீதியை ஒட்டுமொத்த சாதிக்கானதாகவே காட்சிப்படுத்துகிறார். அது மட்டும் அல்லாது சிலப்பதிகாரத்தில் நீதி கேட்டுப் போராடி அலையும் கண்ணகியைப் போல் இவர் இங்கு

www.magazine.skytamilnews.com

உருவகப்படுத்தப்படுகிறார். கணவனைத் தேடி பாடப்படுகின்ற பாடல்கள் எல்லாம் ஒரு சாதாரண பெண்ணாகவே அவர் வலம் வருவது வியத்தகு விடயமாகவே கருத முடிகிறது.

அதேபோல் வழக்கறிஞராக படம் முழுவதிலும் பேசப்படுகின்ற சூர்யா உண்மையில் வாதாடிய வழக்கறிஞரின் தோற்றத்தை முற்றிலும் ஒத்ததாகவே அமைகிறது. இருப்பினும் சூர்யாவின் நடிப்பு அவர் நடிப்பின் மீது கொண்டுள்ள முதிர்ச்சியையும் திரைப்படங்கள் மீது அவர் கொண்டுள்ள உன்னிப்பான பார்வையையும் திரையிட்டு காட்டுவதாகவே அமைகிறது.

சூர்யாவின் கதாபாத்திரத்திற்கு அமைவாக உள்ள சில கேள்விகள் பார்ப்போரையும் ஆழ்ந்த சிந்தனைக்குள் உள்வாங்கிக் கொள்கிறது.

"தலை கோதும் இளங்காத்து செய்தி கொண்டு வரும் மரமாகும் விதை எல்லாம் வாழ சொல்லித்தரும்"
"நீலவண்ணக் கூரை இல்லாத நிலமிங்கு ஏது காலமென்னும் தோழன் உன்னோடு தடைகளை மீறு"
என வருகின்ற பாடல் வரிகளும், பிரதீப் குமாரின் மயக்கும் குரலும் அப்படி ஒரு ஈர வலி அது.

ஜெய்பீம் திரைப்படம் போன்று சமூக உணர்வுகள் ஏனைய பொதுவான விடயங்களை கூறுகின்ற சில படங்களை நான் இங்கு வரிசைப்படுத்துகின்றேன். ஆனாலும் அவைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாகவும் எனக்கு மிகவும் பிடித்த கதைக்களத்தை கொண்டதாகவுமே இத்திரைப்படத்தை நான் காண்கிறேன்.

அவைகளாவன:

1. விசாரணை (2015) - வேதனைக்கும், அதிகார துஷ்பிரயோகத்துக்கும் எதிரான படைப்பு. வெற்றிமாறன் இயக்கம்.

2. கர்ணன் (2021) - சாதி அடிப்படையிலான ஒடுக்குமுறை, எதிர்ப்புப் போராட்டம் பற்றிய படமாக, தனுஷ் நடித்துள்ளார்.

3. அசுரன் (2019) - சாதி, சமூக மேலாதிக்கம், பழி தீர்த்தல் - அனைத்தும் இணைந்த கதை.

4. பரியேறும் பெருமாள் (2018) - கல்வி, சாதி சிந்தனை, அடக்குமுறை - யதார்த்தமாக சித்தரிக்கப்படும்.

5. ஓநாயும் ஆட்டுக்குட்டியும் (2013) - நேர்மையான மனிதர்கள் எப்படிச் சிக்கிக்கொள்கிறார்கள் என்ற படிமம்.

ஜெய் பீம் திரைப்படத்தில் பாராட்டத்தக்க விடயமாக தமிழகத்தில் சில அடிப்படைகளில் படமெடுத்தால் வெற்றி பெறும் என்று தமிழக மக்களின் உணர்வுகளை தூண்டும் அடிப்படையிலான கதைக்களத்தை தேர்ந்தெடுத்துள்ளனர்.

காவல் துறை அவலங்களாகிய, பொய் வழக்குகள் போடுவது, குற்றவாளிகளை கொடுமைப்படுத்துவது போன்ற காவல்துறை பிரச்சனைகளை வழக்கின் கோணத்தில் காட்டியுள்ளனர். ராஜாகண்ணு மற்றும் பார்வதி உண்மை வழக்கை அடிப்படையாகக் கொண்டு காவல்துறை அத்துமீறல்களை படமாக கொடுத்திருப்பது அருமை. உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளது. அதில் பெரும்பாலான இயக்குனர்கள் தோல்வியுற்றே இருக்கின்றனர். ஜெய் பீம் அதிலிருந்து விலகி மக்களின் வரவேற்பை பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

செங்கேணியாக நடித்துள்ள லிஜோமோல் ஜோஸ் அந்த கதாப்பாத்திரத்திற்கு அருமையாக பொருந்தியுள்ளார் அருமையாக நடித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டின் கால கட்டத்திற்கேற்ப களத்தை மிகவும் கவனமாக ஒவ்வொரு காட்சியிலும் பின்பற்றி இருப்பார்கள். சந்துரு கதாப்பாத்திரத்தில் சூர்யா அழகாக பொருந்தியுள்ளார். பின்னணி இசையும் ஒளிப்பதிவும் அருமை, படத்தின் நகர்வுக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கின்றது. பாடல்கள் மனதை வருடிச்செல்கின்றன.

ஜெய் பீம் திரைப்படத்தின் சிறப்பியல்பாக என்னால் சில விடயங்களை தரவரிசைப்படுத்த முடிகிறது அவை உண்மை சம்பவத்தின் அடிப்படையில் உருவாக்கம், சமூக அநீதிக்கு

www.magazine.skytamilnews.com

எதிரான குரல், சூர்யாவின் கதாபாத்திரம், நுணுக்கமான படைத்திறன், முக்கியமான சமூக செய்தி, அறுவை சோதனைக்குரிய உணர்ச்சி காட்சிகள், அதிகப் பாராட்டுகள் மற்றும் சர்வதேச கவனம் என்பவைகளை கடந்து வேற எது ஒன்றாகவும் இத்திரைப்படம் இருக்க முடியாது என என்னால் என் கருத்துக்கணிப்பால் கூற முடியும்.

என் மனதுக்கு நெருடலானவை என நான் தரப்படுத்துகின்ற போது ஒரு உண்மை சம்பவத்தை அப்படியே படமாக எடுப்பது கடினமான ஒன்று. ஆனால் பல காட்சிகள் சினிமாத்தனமாக இருப்பதை உணர முடிகின்றது. விசாரணை கமிஷன் அடிப்படையிலான விசாரணையில் இன்னும் கொஞ்சம் விளக்கியிருந்தால் நன்றாக இருக்கும். அந்த காட்சிகள் அழுத்தமில்லாமல் நகர்வது போல் உணர முடிகின்றது.

அரசு தரப்பு வாதங்களில் வலிமையில்லாத காட்சியமைப்பு. வழக்காடும் விதத்தில் முற்றிலுமாக அனைத்து காட்சிகளும் யதார்த்தத்தை மீறி கதாநாயகனின்

வாதத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து நகர்வது கொஞ்சம் சினிமாத்தனம். என் கவனத்தை மிக ஈர்த்து கவனத்திற்குள்ளான -வையாக அமைவது முதல் காட்சியிலேயே ஜாதிப் பிரிவினை அடிப்படையில் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மீது பொய் வழக்குகள் போடப்படுவதான காட்சி அமைப்பு. இருளர் சமூகத்தின் வாழ்வியல் தொழில் முறைகளை எடுத்து காட்டியுள்ளனர்.

ஒரே கல்லுல 7000 மாங்காய் என்று ஒருவர் சொல்ல 7000 மாங்காய் அல்ல மனிதர்கள் என்ற வசனம். ஜாதிய அரசியல் மற்றும் அதிகார மீறலை பின் புலப்படுத்தியுள்ள படம். ஆனால் ஜாதிய அரசியல் மட்டுமே இன்றைக்கு நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட ஜாதி மீது மட்டும் திருட்டு குற்றம் சொல்லும் போது திருடன் இல்லாத ஜாதி இருக்கின்றதா என்ற வசனம்.

ஒரு காட்சியில் தன் கணவனை காப்பாற்ற பணம் கொடுக்க முடியாமல் தாலியை கொடுக்க முன்வரும் போது பாம்பு கடித்து வந்த ஒருவனை பணமில்லாவிட்டால் காப்பாற்ற மாட்டாயா? என்று சந்துரு கேட்க அங்கே பணம் என்பது வெற்று காகிதம் என்பதை சொல்லாமல் சொல்லியிருப்பார்கள்.

தமிழகத்தின் ஹிந்தி எதிர்ப்பு நிலை அனைவரும் அறிந்ததே. அதற்கேற்ப ஒரு காட்சியில் ஐபு பெருமாள் சாமி ஹிந்தி பேசும் சேட்டு ஒருவரை தமிழில் பேச சொல்லி அடிப்பார். இது இந்தியா முழுவதும் பேசும் பொருளாகும் ஒரு காட்சியாக இருக்கும்.

அதே போல் வழக்கை வாபஸ்பெற செங்கேணியிடம் பொலிஸ் உயர் அதிகாரி நஷ்ட ஈடு வாங்கிகொடுப்பதாக சொல்லும் போது, செங்கேணி என் கணவரை கொலை செய்ததற்காக அவர்கள் கொடுக்கும் பணம் அந்த கொலையை நியாயப்படுத்துவதாக தெரியும். வழக்கில் தோற்றாலும் பரவாயில்லை அந்த பணம் தேவையில்லை என்று சொல்லும் காட்சி.

ஒவ்வொரு கதாபாத்திரத்தை பொறுத்தவரையிலும் ஒவ்வொரு கருத்துக்கும் அனுப்பி படமாக இருந்தாலும் புத்தகமாக இருந்தாலும் வாசகனிடமிருந்து எதிர்பார்க்க முடியும் அப்படி என் கருத்துக் கணிப்பு :-

- சூர்யாவின் நடிப்பு: மிக நுணுக்கமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் நடித்துள்ளார்.


- தீவிரமான உரையாடல்கள்: சாதி அடிப்படையிலான அதிகார துஷ்பிரயோகங் கள் பற்றிய தெளிவான உரையாடல்கள் உள்ளன.

- இயக்கம் மற்றும் திரைக்கதை: மிகவும் வலுவாக அமைந்துள்ளன. உண்மை சம்பவங்களை உணர்ச்சிகரமாக சித்தரிக்கிறது.

- சமூக சிந்தனை: இது சாதி, மனித உரிமைகள், அரசியல் அதிகாரம் ஆகியவற்றைப் பற்றிய ஆழமான சிந்தனையைத் தூண்டுகிறது.

பொதுவான கணிப்பு: இது தமிழ் சினிமாவில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் குறித்து பேசும் முக்கிய படங்களில் ஒன்றாகும். அதே நேரத்தில், சிலர் இப்படம் மிகவும் உணர்ச்சி பெருக்கத்துடன் செல்லும் அல்லது சட்ட நடைமுறைகளை ரொம்மாந்தமாகச் சித்தரிக்கிறதென விமர்சனம் செய்யலாம். இருந்தாலும், அது திரைத்தரத்தில் அல்ல,

www.magazine.skytamilnews.com




சமூக தாக்கத்தில் வெற்றி பெற்ற படம். படத்தினுடைய இறுதிக்காட்சியில் நீதிமான்களுக்கு ஒரு கோரிக்கை வைக்கிறார். சிலப்பதிகாரத்தில் கண்ணகி எப்படி தன் கணவனை இழந்து விட்டு கையில் சிலம்போடு நீதி கேட்டு நின்றாளோ, அதைப் போலவே இந்த பெண் நிற்கிறாள் என்கிற காட்சியை மையப்படுத்தி காட்டுவது கதையின் மிகப்பெரிய பலம்.

இறுதிக் காட்சியில் பழங்குடியின மக்களிடையே கல்வி வளர்கிறது என்பதை கனகச்சிதமாக காட்டி இருக்கிறார். அந்தக் குழந்தை செய்தித்தாளை எடுத்துப் படிக்க, ஒரு கண் சைகையில் கால் மேல் கால் போட்டு அமர்வது என வரும் காட்சி எனக்குப் பிடித்த அத்தனை காட்சிகளிலும் மிக அருமையான காட்சி.

திரைப்பட ஆசிரியர் இத்திரைப்படத்தின் வெற்றிக்காகவும் ஒட்டுமொத்த இந்தியாவின் குடிமக்களின் நீதிக்காகவும் போராடுகின்ற காட்சிகளை முற்பகுதியில் அளிக்கப்பட

நினைக்கின்ற ஒதுக்கப்பட எத்தனிக்கின்ற ஒரு சாதியை அவர்களும் மனிதர்கள் என்று விளிம்பு நிலையிலிருந்து நவீனத்துவத்தின் முதிர்ச்சி அடைந்த நிலைக்கு கொண்டு வந்து வழிகாட்டுகின்ற இச்செயல்பாட்டிற்கு ஜெயபீம் என்று உரத்த குரலில் எல்லோரும் சொல்ல வேண்டும் என்பதற்காகவே பெயர் வைத்தது போன்று படம் முழுவதையும் சிறப்பாக எழுதி முடித்திருக்கிறார்.
இறுதியாக இத்திரைப்படம் என் உணர்விலும் உள்ளத்திலும் பல்வேறு வகையான மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. அதுபோல இத்திரைப்படத்தை காண்போர் மனங்களில் பல்வேறு வகையான உணர்வுரீதியான மாற்றங்கள் நிகழும் என நான் நம்புகிறேன்.

அது போன்று மனிதர்களை பொதுவாக மனிதன் என்ற சாதிக்குள் மட்டும் அடக்கி நோக்க வேண்டும் என்ற மிக முக்கியமான கருத்துக்கணிப்பை சித்தரித்த படம் என் ஆழ்மனதில் வேரூன்ற வைத்தது.

ஜெய்பீம் என்பது வெறும் படம் அல்ல. இது ஒரு சமூக சிந்தனையை தூண்டும் இயக்கம். சாதி அடிப்படையில் நிகழும் அநீதி, சட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய தெளிவான உரையாடலை தந்துள்ளது.



கவிப்பொய்கை.
எம்.ஜே.ஜவ்சன் அஹமட்
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

www.magazine.skytamilnews.com

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் விளம்பரங்களையும்
## குறைந்த கட்டணத்தில்
## இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249

**துணிந்தெழு சஞ்சிகை மாத இதழை இலவசமாக Whatsappயில் பெற்றுக்கொள்ள**

**Get the Issue of Thunindhuzhu Magazine for Free on WhatsApp**

**Say 'Magazine PDF' on: +97431060249**



https://magazine.skytamilnews.com

facebook.com/Thuninthelu instagram.com/skytamil.lk